சுரேச விஜயம்

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கூரேசவிஜயம்



ஸ்ரீ. உ. வே. கனிசப்பாக்கம்

தி. ந. ஸம்பத்குமார தாதாசாரியரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை

பட்டாபிராமன் கம்பெனியாரால்

ஸ்ரீ வைஷ்ணவ முத்ரணாலயத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1927.

விலை அணா 6.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கூரேசவிஜயம்.

பிரம்மாண்ட புராண பதரிகாசிரம மாஹாத்மியத்தில் நரனுக்கும் நாராயணனுக்கும் நடந்த சம்வாதத்தில்,

மந்நியோகாத் பூதபுர்யாம் அஹீநாம்ஈஸ்வர:கலௌ
ஸ்ரீராமாநுஜரூபேண ஜநிஷ்யதி ஸதாம்முதே

என்னுடைய நியோகத்தால் - ஸ்ரீபெரும்பூதூரில் - ஸர்ப்பங்களுக்கெல்லாம் இராஜனை - திருவநந்தாழ்வான் - கலியுகத்தில் ஸ்ரீராமாநுஜரென்ற ரூபத்தாலே ஸாதுக்களைச் சந்தோஷிப்பிக்க அவதரிக்கப்போகின்றாரென்றும்,

விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரதிபாதந தத்பரா:
ததாஶயா: ஸதாசாரா: ஸாத்விகா: தத்வதர்ஶிந:
வேதாந்தத்வய தத்வஜ்ஞா: பவிஷ்யந்தி குரூத்தமா:
ததா தத்விஷயே ஸர்வை: தேசிகை: ஆத்ருதோ மஹாந்.

விஶிஷ்டாத்வைத சித்தாந்தத்தைப் ப்ரதிபாதிக்கையாகிய சதாசாரமான - நல்ல ஆசாரத்தில் - ப்ரவேசித்தவர்களான கூரத்தாழ்வான் - எம்பார் - பட்டர் - அருளாளப்பெருமாளெம்பெருமானார் - முதலான பூர்வாசாரியர்கள் அவதரிக்கப் போகின்றார்களென்றும் - சொன்னதின்படியே - உடையவர் - கூரத்தாழ்வான் முதலான பூர்வாசாரியர்களவதரித்து விஷ்ணு தரிசனத்தை விளங்கச் செய்தார்கள்.

அக்காலத்தில் கலிபுருஷனானவன் உலகங்களுக்கு அஞ்ஞானத்தைக் கல்பிக்கவேண்டுமென்று - சோழனைப் பிறந்து - (சிவாத்பரதரம்நாஸ்தி) சிவனைவிடப் பரதத்வம் வேறேயில்லையென்று தாம்ரஶாஸனத்தை யெழுதி, அதின் கீழே சிலஸ்ரீவைஷ்ணவ வித்வான்களை பலாத்காரஞ் செய்து கையெழுத்து வாங்கிக்கொண்டு வருகையில் கூரத்தாழ்வான் சிஷ்யராகிய நாலூராச்சானென்பவர் அந்தச் சோழனுக்கு மந்திரியா யிருந்தபடியால் சாதுக்களான ஸ்ரீ வைஷ்ணவர்களிடத்தில் கையெழுத்து வாங்குவதனால் என்னபயன் பெறுவீர்? சாக்ஷாத் திருவநந்தாழ்வானாகிய ஆதிசேஷன் ஸ்ரீபாஷ்யகாரராய் அவதரித்து ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கிறார், அவர் ஒருவரைமாத்திரம் ஜயித்து அவரிடத்தில் கையெழுத்துவாங்குவீராகில் ஸ்ரீவைஷ்ணவ வித்வாம்ஸர்கள் எல்லாரையும் ஜயித்தவராவீர் என்று சொன்னார்.

அதன்பேரில் மேற்படி அரசன் இராசபடாளை அனுப்பி ஸ்ரீபாஷ்யகாரர் என்னப்பட்டவரை இராஜன் அழைத்துவரச் சொன்னானென்று செய்தி சொல்லக்கேள்விப்பட்ட கூரத்தாழ்வான் த்ரிகாலக்கியானி யாகையால் இராஜவிரோதம் சம்பவிக்குமென்று திருவுள்ளத்தில் கருதி ஸ்வாமியை வெள்ளைசாத்திக்கொண்டு திருநாராயணபுரத்தேற வெழுந்தருளும்படி விண்ணப்பஞ்செய்து உடுத்துக்களைந்த நின் பீதகவாடையுடுத்து என்கிறபடியே உடையவருடைய காஷாயத்தையும் - த்ரிதண்டத்தையும் தாம் தரித்துக்கொண்டு இராஜன் ஸதஸுக்கு எழுந்தருளினார். உடையவர் பெரிய நம்பிகளையும்கூட சஹாயமாய் எழுந்தருளும்படி யனுப்பித்து தாம் திருநாரயண புரத்தேற வெழுந்தருளினார்.

கூரத்தாழ்வான் அந்த ஸதஸிலிருந்த வித்துவான்களாற் பூஜ்யராய்-அவர்களால் தரப்பட்ட ஆஸனத்திலெழுந்தருளியிருக்கையில், மேற்படி ஸாஸனப் பட்டயத்தைக் கையிற்கொண்டுவந்து கொடுக்க-அவர் வாசித்துப் பார்த்து இதற்கென்ன செய்யவேண்டுமென்று கேட்க, அதிலே நீரும்கையெழுத்து வைக்கவேண்டுமென்கிறார்கள். இது வித்வான்கள் முன்னிலையிலே பிரசங்கம் பண்ணித் தோற்றால் கையெழுத்து வைக்கவேண்டியதொன்றாயிருக்க, அப்படிப்பட்ட தொன்றுமில்லாமல் பலத்காரமாய்க் கையெழுத்து வைக்கச்சொல்வது வித்வத் திறத்துக்கும் இராஜநீதிக்கும் சேராதென்ன, அப்படியே வித்வான்களுடனே பிரசங்கம் பண்ணுமென்று சிலரை யேவி விட்டான்.

அப்போதவர்கள் சிவபிரானுக்குப் பரத்வஞ் சொல்லவேண்டுமென்ற கருத்தைக்கொண்டு இருபத்தைந்து ககூஷி சொன்னார்கள்.

அந்த இருபத்தைந்து ககூஷிகளாவன.

1-வது பர்க்க சப்தத்தாலே காயத்ரிக்குப் பொருள் சிவபிரான்

2-வது நமக சமகத்தாலே சிவனுக்குப் பரத்வம்

3-வது ஸ்ரீ ராமர் லிங்கபூசை செய்தார்

4-வது கிருஷ்ணன் கைலாசத்துக்குப் போனார்

5-வது விஷ்ணு தன்கண்ணுடனே ஆயிரங் கமலங்களினாலே சிவனைப் பூசித்துச் சக்கரம் பெற்றார்.

6 வது மன்மதனைச் சிவன் தஹித்தார்.

7-வது விஷத்தைச் சிவன் பானஞ்செய்தார்.

8-வது சிவன் எமனை கர்வபங்கஞ்செய்து மார்க்கண்டனுக்குச் சிரஞ்சீவிபட்டங் கொடுத்தார்.

9-வது சிவன் திரிபுர விஜயஞ்செய்தார்.

10-வது தக்ஷன்யாகத்தைச் சிவன் அழித்தார்.

11-வது சிவன் அர்ச்சுனனுக்குப் பாசுபதங்கொடுத்தார்.

12-வது சிவன் சரபப்பக்ஷியாய் வந்து நரசிம்மத்தை ஜயித்தார்.

13-வது மோஹினி வேஷந்தரித்த விஷ்ணுவைச் சிவன் புணர்ந்து ஜாஸ்தாவைப் பெற்றார்.

14-வது-சிவன் அனேககோடி ஜனங்களினலே பூஜிக்கப் படுகின்றார்.

15-வது சிவன் தன்னைப் பூசித்த பேருக்குச் சகல ஐசுவரியங்களையும் கொடுக்கிறார்.

16-வது தசாவதாரமெடுத்த விஷ்ணுவினலே சிவன் பூசிக்கப்பட்டார்.

17-வது சிவன் ஹரிஅயனலே காணப்படாத அடிமுடியை யுடையவர்.

18-வது சிவன் பிறப்பிறப்பில்லாதவர்.

19-வது காசியிலே விஷ்ணுவே பரனேன்று பிரமாணஞ் செய்த வியாசருக்குப் புஜம் ஸ்தம்பித்துப் போயிற்று.

20-வது திரிபுரவிஜயத்திலே சிவனை விஷ்ணு ரிஷபமாய்த் தாங்கினர்.

21-வது ப்ரம்ஹாவின் சிரசுகளைச் சிவன் மாலையாகத் தரித்தார்.

22-வது சிவன் ஞான மோக்ஷங்களை கொடுக்கிறவர்

23-வது லிங்கத்தை விஷ்ணு யோனியாய்த் தாங்கினர்

24-வது சங்கரநாராயண ரூபத்தில் விஷ்ணுபாதி ரூபமாயிருந்தார்.

25-வது-அந்தச் சங்கரநாராயண ரூபத்திலே, சிவன் பிரகாசமானார்.

இவ்வாறு சொன்னகக்ஷிகள் ஒவ்வொன்றுக்கும் சுருதி இதிஹாச புராணங்களாலே ஐந்தாறு கக்ஷிகள் சொல்லி கண்டித்த பிரகாரங்களாவன.

1-வது-பர்க்க சப்தம்.

காயத்திரியிலே சொல்லப்பட்ட பர்க்க சப்தத்துக்குச் சூரியமண்டலத்தில் வசிக்கும் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வர்ணமயமான திருமேனியின் தேஜஸ்ஸைச் சொல்லுகிறதென்று வஸிஷ்டரும் விசுவாமித்திரரும் - வியாகரண சூத்திரங்களினாலே வியாக்கியானம் செய்தருளினார்கள்.—இதற்குப் பிரமாணம்.

முதலாவது — சாந்தோக்ய உபநிஷத்தில்,

"த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்தீ
நாராயணஃ ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்டஃ
கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபுஃ த்ருதசங்கசக்ரஃ
தஸ்ய யதா கப்யாஸம் புண்ரீகமேவமக்ஷிணீ

என்றதில் - சூரியமண்டலத்தில் வசிக்குமவன் நாராயணனென்றும் அவன் தாமரைக்கமலத்தை ஆசனமாக உடையவனென்றும் - கேயூர மகரகுண்டல கிரீடஹாரங்களையும், ஸ்வர்ணமயமான திருமேனியையும், சங்கு சக்கரங்களையும், உடையவனென்றும் அவன் கபியென்ற சூரயனு

லே' விகாசம்பண்ணப்பட்ட தாமரைக்கமலம் போன்ற கண்களையுடையவனென்றும் சொல்லி யிருக்கையால் ஸ்வர்ணமயமான திருமேனியின் தேஜஸ்ஸென்று பர்க்கசப் தத்துக்கு அர்த்தம்பண்ணி யிருக்கிறார்கள்.

இரண்டாவது.—காயத்ரியை அநுசந்திக்கப்பட்ட பிராமணர்களுக்கு நித்தியகர்மாநுஷ்டானங்கள் விதித்திருக்கின்ற வியாச ஸ்மிருதியிலேயும், மனுவிக்கியானத்திலேயும், சொல்லுகிறதாவது; பிராம்மணன் - நித்திரையில் நின்று எழுந்திருக்கும்போது பிரதமத்தில்-ஹரிரோ ஹரி-ஹரிரோ ஹரி யென்று - எழுதரம் உச்சரிக்க வேண்டுவதென்றும், ஸ்நானஞ்செய்கையில் கோவிந்த கோவிந்த வென்று மூன்றுதரம் உச்சரிக்கவேண்டுவதென்றும், ஆசமனம் பண்ணும்போதும் அங்கந்யாசம் - கரந்யாசங்களிலேயும் அச்சுதாநந்த கோவிந்தமென்கிற மந்திரத்தையும், கேசவாதிபன்னிரண்டு நாமங்களையும் உச்சரிக்கும்படியாயும், சந்தியாவந்தனங்களிலே சங்கர்ஷணாதி பன்னிருநாமங்களையும் உச்சரிக்குப்படியாயும், ஜபம்பண்ணுகிறவிடத்தில் ஸ்தலசுத்திபண்ணும்போது, அபவித்ர:பவித்ரோவா என்றும் புண்டரீகக்ஷாயநம: என்றும் விஷ்ணுவின் மந்திரத்தை உச்சரிக்கும்படியாயும் காயத்ரிமந்திரம் இருபத்துநாலும், விஷ்ணுபரமாயே யிருக்கையாலும், பர்க்கசப்தத்துக்குச் சப்தச்சலத்தாலே சிவபரமாக அர்த்தஞ்சொல்வது வேத விரோதம்,

மூன்றாவது.—மயித்திரா வருண உபநிஷத்திலும், தைத்திரீயோபநிஷத்திலும் இப்படியே காயத்ரிக்குப் பொருள் ஸ்ரீமந்நாராயணனே என்பதாய்ச் சதாதியானிக்கிறேனென்று சொல்லியிருக்கையால், ஶ்ருதி ஸ்மிருதி புராணங்களில் பிரமாணங்கள்சொல்லி உத்தரித்திடாமல், ஒருவாக்கியத்து

க்கு நாநு அர்த்தங்களுண்டென்கிற கியானமில்லாமலும் ப்ரகரணத்துக்கு உசிதமாய் ஸ்ரீமந்நாராயணனுடைய தேஜஸ்ஸென்று அர்த்தஞ்சொல்லாமலும் ஸ்ருதி விரோதமாய்ச் சொல்வது அவைதிகமென்று கண்டிக்கப்பட்டது.

உ-வது நமகசமகம்.

நமக சமகத்தின் சங்கதியென்னவெனில், இராவணன் வேதத்தைச் சிக்கறுத்து, பதம் - க்ரமம் - ஜடை - பாதம்-ப்ரச்நம் முதலிய அலங்காரங்களை ஏற்படுத்தும்போது, சிவனிடத்தில் அபிமானத்தாலே ருத்திரனை நமஸ்கரிக்கிறேனென்று சொன்னதொன்றாகையாலே, அத்தாலே ருத்ரனுக்குப் பரத்வமுண்டென்று சொன்னால், கல்பங்கள் தோறும் விஷ்ணுவினிடத்தில் பிரஹ்ம ருத்திரேந்திராதிகள் ஜனித்ததாய்ச் சொல்லுகிற ஸ்ருதிகளுக்கு விருத்தமாகையாலே நமகசமகத்தால் சிவனுக்குப் பரத்துவஞ்சொல்லவொண்ணாது.

முதலாவது—(ஆரணத்தில்)

யதோர்ணநாபிஃ ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச,
ததாப்ருதிவ்யாம் ஓஷதயஸ்ஸம்பவந்தி,
யோஸௌ ச யஜ்ஞோ விஷ்ணுஃ,
ஸத்வகுணப்ராணீதோபவத்,
தஸ்யநாபேஃ அஜோத்மா ஸ்வயம்பூஃ,
ததாதஸ்ய ப்ருவோந்தராலாத் தமோருத்ரஃ
ப்ராதுரபவத்.

என்றதில், (யதோர்ணநாபிஃஸ்ருஜதே க்ருஹ்ணதேச ததாப்ருதிவ்யா மோஷதயஸ்ஸம்பவந்தி.) என்பது-ஊர்ண

நாபியென்கிற சிலந்திப்பூச்சியானது நூலை எப்படி ஸ்ருஷ்டித்து மறுபடியும் க்ரஹிக்கின்னறதோ அப்படியே ப்ருதிவியையும் அதில் ஓஷதிகளையும் ஜனிப்பித்தான் (யோஸௌ சயஜிதோ விஷ்ணுஃ ஸத்வகுணப்ரணீதோபவத்.) அவன் சாத்விககுணமுடையவனென்று யாவராலும் பிரசித்தமாய்ச் சொல்லிக்கொள்ளப்படும் ஸ்ரீ மஹாவிஷ்ணு. (தஸ்யநாபேஃ அஜோத்மா ஸ்வயம்பூஃ) அவனுடைய நாபிக்கமலத்தில் ராஜஸனான ப்ரம்ஹா பிறந்தான் (ததாதஸ்யப்ருவோந்தராலாத் தமோருத்ரஃ ப்ராதுரபவத்.) அப்படியே அந்த ப்ரம்ஹாவின் புருவங்களின் மத்தியில் தாமஸனான ருத்ரன் பிறந்தான் என்றுசொல்லி, ருத்ரன் என்றுசொன்ன பதத்துக்கு ஏகாதச ருத்ரர்கள் பிறந்தார்களென்றும், ப்ரம்ஹாவின் புருவங்களின் மத்தியில் சிவன் பிறந்தானென்றும் சொன்னதற்கு, ப்ரம்மா தியானஞ்செய்த தியான ஸ்தானமான புருவங்களின் மத்தியிலிருந்து சிவன் தோன்றினனென்றும் சைவர்கள் சொன்ன கக்ஷிகளுக்கு ப்ரம்ஹாவினிடத்திலே ருத்ரனும் ஏகாதசருத்ரர்களும் பிறந்தார்களென்றும், மற்றொரு கற்பத்தில் விஷ்ணுவினிடத்தில் ருத்ரனாகிய சிவனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்தார்களென்றும், ருத்ரன் என்கிற நாமதேயம் சிவனுக்கு ப்ரம்ஹாவினால் கொடுக்கப்பட்ட ஏழுநாமங்களில் பிரதான நாமமென்றும் ஸ்ருதிகள் பிரதிபாதிக்கின்றன.

ப்ரம்ஹாவினிடத்தில் ருத்ரனாகிய சிவனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்தார்களென்று சொன்னதற்கு ஸ்ருதி.

இரண்டாவது—

ஸப்ரஜாபதிரேகஃபுஷ்கரபர்ணே ஸமபவத்-
லலாடாத்க்ரோதஜோருத்ரஃ த்ரயக்ஷஃகண்டபரசுஃ

வரஜ்ஜநந் ஸம்வத்ஸரோஜாயத
இந்த்ரோவருணஃஸோமோ ருத்ரஃ
பர்ஜந்யோ யமஃ ப்ரம்ஹணஃ புத்ராய
ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய புத்ராய ருத்ராய.

அந்தசதுர்முகனொருவனே தாமரைக்கமலத்திலிருந்து பிறந்தான். அவனிடத்தில் ருத்திரனாகிய சிவன் பிறந்தான். வருஷாதி தேவதைகளும், இந்திரன் - வருணன் - சோமன்- ஏகாதச ருத்ரர்கள் - பர்ஜந்யதேவதைகள் - இயமன் முதலானோர்களும் பிறந்தார்கள்.

மற்றொரு கற்பத்தில், விஷ்ணுவினிடத்தில் ருத்ரனும் ஏகாதச ருத்ரர்களும் பிறந்ததற்கு ஸ்ருதி.

மூன்றாவது—

அத புருஷோஹவை நாராயணஸ்ஸோகாமயத
ப்ரஜாஃஸ்ருஜேயேதி, நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே
நாராயணாத் ருத்ரோஜாயதே
நாராயணாத் இந்த்ரோஜாயதே
நாராயணாத் த்வாதசாதித்யா ருத்ராஃ
வஸவஃ ருஷயஃ ப்ரஜாபதயஸ்ச
பூர்வே தேவாஃ ஸமுத்பத்யந்தே.

என்று நாராயணனிடத்தில் - ப்ரம்ஹா - ருத்திரன் இந்திரன் துவாதசாதித்யர்கள் - ஏகாதசருத்ரர்கள் அஷ்ட வசுக்கள் ஸப்த ரிஷிகள் நவப்ரஜாபதிகள் முதலான தேவர்கள் பிறந்தார்களென்றும், ப்ரம்ஹாவினிடத்திலும்விஷ்ணுவினிடத்திலும் ருத்ரனாகிய சிவனும் ஏகாதசருத்ரர்களும் பிறந்தார்களென்றும் சொல்லியிருக்கையால், ருத்ரனென்

கிற பதத்துக்கு ஏகாதச ருத்ரர்களென்று சொல்லும்பட்சம் நிரஸ்தமாய்விட்டது.

நான்காவது—சதபதபிராம்மணம் என்ற ஶ்ருதியில்

அபூத்வா இதம் ப்ரதிஷ்டேத்யாரப்ய
பூதாநாஞ்சப்ரஜாபதிः-ஸம்வத்ஸராய தீக்ஷிதः
பூதாநம்பதிः- க்ரஹபதிராஸீத் -
உஷாபத்நீத்யாதிகமுக்த்வா, பூதாநாம்ப்ரதி
ஸம்வத்ஸரஉஷஸி ரேதோஸிஞ்சத்
ஸம்வத்ஸரே குமாரோஜாயத
ஸோரோதீத் தம்ப்ரஜாபதிரப்ரவீத்
குமார கிம்ரோதிஷீதி
யத்ஶ்ரமாத் தபஸோபிஜாதோஸீதி ஸோப்ரவீத்,
அநபஹதபாப்மா ஹமஸ்மி
அநபிஹிதநாமநாமமேதேஹி,
பாப்மநோபஹத்யாஇதிதமப்ரவீத்
அபஹதபாப்மா அதபாப்மாஸி
ருத்ரபவ சர்வ ஈசாநःபதிः
பீமோக்ர இதி ஸப்தநாமாநி.

என்றதில் ப்ரம்ஹா ஒருவருஷகாலம் தீக்ஷிதனயிருந்து உஷஸ்ஸினிடத்தில் கர்ப்பாதாநம்பண்ணினர், ஸம்வத்ஸரத்தில் ஒருபிள்ளை பிறந்தான், அவன் பிறக்கும்போது அழுதான் நீ ஏன் அழுகிருயென்றும் நீ சிரமத்தினலே தபசு செய்து பிறந்தையே யென்றும் ப்ரம்ஹா கேட்டார், அப்போது நான் பாபியாயிருக்கின்றேனே யென்றும், என்னுடைய பாப விமோசனத்துக்காக நல்ல நாமம் கொடுக்க வேண்டுமெனறுங் கேட்க, நீ பரிசுத்தனுக்கடவாய் உனக்கு ருத்ரன் - பவன் - சர்வன் - ஈசானன் - பதி-பீமன் உக்ரன்

என்கிற எழு திருநாமஞ்சாற்றினேம் என்று ப்ரஹ்மாவும் சொன்னர். இதில் சிவனைக் குறித்துக் குமாரனே என்றும் தபசைப்பண்ணிப் பிறந்தாயென்றுஞ் சொல்லிய இவை முதலான சங்கதிகளினுலே ப்ரம்ஹா தியானம் செய்ததற்கு த்யான ஸ்த்தானமான புருவங்களின்மத்தியில் ஆவிர்ப்ப வித்தானென்று சைவர்கள் சொல்லுகிற யுக்தி நிரசிக்கப்பட்டது. பின்னும் ருத்ரனென்கிறபெயர் ப்ரஹ்மாவினுல் கொடுக்கப்பட்ட எழுநாமங்களில் முதல் நாமமென்றும் சொல்லப்பட்டது.

மேலும் ப்ரஹ்ம ருத்ரர்கள் இறந்து நாராயணனெருவனே முடிவிலிருக்கின்றனென்றும், மறுபடியும் இறந்த யாவரும் அந்த ஸ்ரீமந்நாராயணனுலே ஸ்ருஷ்டிக்கப்படுகிறார்களென்றும் சொல்லி யிருக்கையால் நமக சமகத்தாலே சிவனுக்குப் பரத்வமென்று சொல்லுகை ஸ்ருதிவிரோதம். அதாவது.

ஐந்தாவது—ஆங்கீரஸ உபநிஷத்தில்.

ஏகோஹவை நாராயண ஆஸீத்-
நப்ரம்ஹா நசங்கரஃ ஸமுநிஃ பூத்வா ஸமசிந்தயத்-
ததஏதேத்யாநாஜ்ஜாயந்தே,விஸ்வோ
ஹிரண்யகர்ப: அக்நி யம வருண ருத்ரேந்த்ராஃ-

என்று ப்ரஹ்மா உருத்திரன் முனீசுவரர்களிறந்து நாராயணன் ஒருவனே முடிவிலிருக்கின்றனென்றும், பின்பு இறந்த யாவரும் விஷ்ணுவின் நினைப்பினு லுண்டானர்களென்றுஞ் சொன்னதை, சடகோபர், திராவிடவேதத்தில் [ஒன்றுந்தேவுமுலகு முயிருமற்றும் யாதுமில்லா அன்று நான்முகன்றன்னெடு தேவருலகோடுயிர் படைத்தான்] என்றதில், என்றைக்கு ப்ரஹ்மா ருத்ரர்களும் மற்றவர்

களும் இறந்தார்களோ அன்றைக்கே இறந்தவர்களைப் படைத்தானென்று சொல்லியிருக்கையால்; இந்தச் சுருதிகளுக்குச் சான்றோராட்சியும் உண்டாயிருக்கின்றது. இதன்றி உ-வது - கட்சி, க-வது தொடரில் சொன்ன, (யதோர்ணநாபிஸ்ஸ்ருஜதே.)என்றசுருதியை ஸ்ரீ கண்ணன்,

(மந்நாபி பங்கஜாஜ்ஜாதః
பத்மயோநிః பிதாமஹः
தல்லலாடாத் பவோருத்ரः
தஸ்மாத் ஜாதஷ்ஷடாநந:

என்னுடைய நாபிகமலத்தில் ப்ரஹ்மாபிறந்தான், அவனுடைய நெற்றியிலிருந்து சிவன் பிறந்தான் அவனிடத்திலிருந்து அறுமுகன் பிறந்தானென்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்.

ப்ருகுடீ குடிலாத்தஸ்ய
லலாடாத் க்ரோதஜ:பிதுः
ஸமுத்பந்ந: ததாருத்ரः
மத்யாந்ஹார்க்கஸமப்ரபः.

ப்ரஹ்மா ஸநகாதிகளை ச்ருஷ்டித்து உலகத்தைப் படையுங்களென்று நியமிக்க, அவர்கள் இவருடைய வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணுமல் போனதின்பேரிலுண்டான கோபத்தினலே கண்கள் சிவந்து மத்தியான்ன சூரியனைப்போன்ற காந்தியுடனே ப்ரஹமாவின் நெற்றியிலிருந்து சிவன் பிறந்தானென்றும், ஸ்ரீபாகவதத்தில்

தியோ நிக்ருஹ்யமாணேபி
ப்ருவோர்மத்யாத் ப்ரஜாபதே
ஸத்யோஜாயதவை தஸ்மாத்
குமாரோ நீலலோஹிதः.

ஞானத்தினாலே நிக்ரஹத்துக்கு அர்ஹனாயிருந்தபோதிலும் ப்ரஹ்மாவின் புருவத்தின் மத்யத்திலிருந்து நீலலோஹிதனென்ற பேரையுடைய சிவன் பிறந்தானென்றும் புராணங்களிலும் சொல்லப்படுகின்றது. உ-வதுகட்சி ங-வது தொடரில், நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே.) என்ற ஸ்ருதிக்கு ஹரிவம்சத்தில்,

க இதி ப்ரஹ்மணோ நாம
ஈசோஹம் ஸர்வதேஹிநாம்
ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ
தஸ்மாத் கேசவநாமவாந்.

என்று கண்ணனைப்பார்த்து சிவன்க என்ற அக்ஷரத்துக்குப் பொருளான ப்ரஹ்மாவும் நானும் ஆக நாங்களிருவரும் உம்முடைய திருமேனியிலுண்டானவர்கள். ஆதலால் உமக்குக் கேசவனென்ற திருநாமம் உண்டாயிற்றென்றும் சொல்லியிருக்கின்றார். இவ்வித ப்ரமாணங்களாலே விஷ்ணுவினிடத்தில் ப்ரஹ்ம ருத்ரர்கள் கல்பங்கள்தோறும் ஜனித்தார்களென்றும், பின்னும் சிவனுடைய வாக்காலே விஷ்ணுவே காரணவஸ்துவென்றும் அத்தாலே மோக்ஷத்தைக் கொடுக்குமவன் விஷ்ணுவென்றும் சொல்லப்பட்டிருக்கையால், நீங்கள் சொல்லுகிற நமக சமகத்தாலே சிவனுக்குப் பரத்வம் சொல்லக்கூடாதென்றும் கண்டித்தார்.

ரு-வது இராமலிங்கபூஜை.

இராவணன் ப்ரஹ்ம வம்சஸ்தனல்ல - ப்ரஹ்ம வீர்யமானாலும் அசுரயோனியில் ஜனித்தபடியால் ப்ராஹ்மண்யமில்லை. தக்ஷப்ரஜாபதி குமார்த்திக்கும் கசியபப்ரஹ்மாவுக்கும் பிறந்த ராட்சஸர்களெல்லாரும் பிராமணர்களல்

லாமற்போனார்கள். இரணியன் இரணியகசிபன் - முான் டாலி சுமாலி - முதலான இராட்சஸர்களைக் கொன்றதற்கு வராத ப்ரஹ்மஹத்தி ராக்ஷஸ யோனியில்பிறந்த இராவணனைக் கொன்றதற்குமாத்திரம் வந்ததோ? இராவணான் ராக்ஷஸனென்பதற்குப் பிரமாணம்.

விபீஷணஸ்து தர்மாத்மா
நது ராக்ஷஸ சேஷ்டிதః

என்றதில் விபீஷணன் தர்மாத்மாவாய்ப் போய்விட்டான் - அவனுக்கு ராக்ஷஸ சேஷ்டிதங்களில்லையென்றும்,

த்வாம்து திக்குலபாம்ஸநம்

இந்த ராக்ஷஸகுலத்தை நாசஞ்செய்யப் பிறந்தவனே யென்று ராவணன் விபீஷணனை திக்காரஞ்செய்தபடியாலும் ராவணான் வாயால் ராக்ஷஸனென்று சொன்னபடியாலும் அவன் ப்ராஹ்மணனுமாகமாட்டான், அவனைக் கொன்றதற்குப் ப்ரம்மஹத்தி வருவதற்கும் ஹேது வில்லை.

முதலாவது—பிரம்மபுராணத்தில்

ததோவாக்யாந்முநீந்த்ரஸ்யதேவோபாலேந்துஶேகரః
சங்கரச்சிந்ந லிங்கஸ்து கானநே விசசாரஹ.

என்கிறபடியே முனிஶ்ரேஷ்டரான பிருகுமஹாரிஷி சாபத்தினாலே உபயருடைய லிங்கங்களுமறுந்து காட்டில் திரிந்துகொண்டிருந்த சிவன்.

சாம்பேய புஷ்ப ஸாஹஸ்ரைః
ஆநர்ச்சச் சங்கரோஹரிம்
ஏகதேஶப்ரஸந்நார்த்தம்
ஸ்வநாஸாம் அச்சிநத்ஸ்வயம்.

என்கிறபடியே சங்கரன் சண்பகப் புஷ்பங்களாயிரங்களினுலே ஹரியை அர்ச்சித்தான். அதில் ஒருபுஷ்பம் குறைந்ததென்று தன் மூக்கை யரிந்து அர்ச்சித்தான்.

த்ருஷ்ட்வா தத்பக்திமதுலாம்
ஹரி: ப்ரீதோவரம்ததௌ
லப்தலிங்கௌச பூஜ்யௌச
ப்ரீயாஸ்தாம் தம்பதீயுவாம்

ஹரியானவர் உலகத்திலில்லாத அந்த பக்தியைப் பார்த்து ப்ரீதியினுலே பார்வதிக்கும் சிவனுக்கும் லிங்கங்களுண்டாகும்படியாகவும் அங்கஹீனரான இவர்களை உலகத்தார் பூசிக்கும்படியாகவும் பரஸ்பரம் போகிக்கும்படியாகவும் வரங்கொடுத்தாரென்று, ருத்ர கீதையில் அகஸ்தியஸம்ஹிதையில் சிவன் சொல்லியிருக்கையால், ஸ்ரீராமர் லிங்கபூஜைபண்ணினுரென்பதும், மேற்படி சுலோகத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் லிங்கங்களுண்டாகும்படி ஹரி வரங்கொடுத்ததாய்ச் சொல்லியிருக்கையால் சிவனுடைய லிங்கமற்றுவிழுகையில் விஷ்ணுவானவர் யோனியாய்ப்போய்த் தாங்கினுரென்று சைவர்கள் சொல்வதும், அபத்தங்களும் மாச்சரியவசனங்களுமாய்விட்டன.

இரண்டாவது—ஶ்ருதியில் இராமோபநிஷத்தில்.

கதயதிபகவாநிஹாந்த்யகாலே
பவபயதாரகம் ப்ரபோதமிதி

இராமதாரக மந்திரத்தை சிவனுடைய ப்ரஹ்மஹத்தி போகும் பொருட்டாக நன்றாக உச்சரியுமென்றும் காசிக்ஷேத்திரத்தில் இறக்குமவர்களுடைய அந்தியகாலத்தில் மேற்படி மந்திரத்தை உபதேசிக்கும்படியாகவும்; அதில் தானே.

அபிமுக்தே தவக்ஷேத்ரே
ஸர்வேஷாம் முக்திஸித்தயே
அஹம்ஸந்நிஹிதஃ தத்ர
பாஷாண ப்ரதிமாதிஷ்ட
க்ஷேத்ரேஸ்மிந் யோர்ச்சயேத் பக்த்யா
மந்த்ரேணநேந மாம்சிவ
ப்ரஹ்மஹத்யாதி பாபேப்யஃ
மோக்ஷயிஷ்யாமிமாசுசஃ.

உன்னுடைய காசிக்ஷேத்திரத்தில் யாவருக்கும் முக்தி கொடுக்கும் பொருட்டு அர்ச்சாவதாரமாய் சமீபத்தி லிருக்கிற என்னை ராமதாரகமந்திரத்தினாலே பக்தியுடன் அர்ச்சிக்கப்பட்டவர்களைப் பிரம்மஹத்தியாதி பாபங்களில் நின்றும் விடுவித்து அவர்களுக்குக் கிரமக்கிரமத்தில் என் னுடைய சாயுஜ்ஜியத்தையுங் கொடுக்கிறேன். ஓய் சிவனே பயப்படாதேயென்று ராமதாரக மந்திரம் உபதேசித்ததா யும் சொல்லியிருக்கையாலும் ராமர் லிங்கபூசைசெய்தா ரென்பது வேதவிருத்தம்.

மூன்றாவது—இதற்குத் தகுதியாய் பிரயாக மாஹாத் மியத்தில்.

தத்ரநாராயணஃ ஸ்ரீமாந்
மயாபிக்ஷாம் ப்ரயாசிதஃ
விஷ்ணுப்ரஸாதாத் ஸுஶ்ரோணி
கபாலம் தத்ஸஹஸ்ரதா
ஸ்புடிதம் பஹுதாயாதம்
ஸ்வப்நலப்தம் தநம்யதா

அழகியபின்புறமுடைய பார்வதியே! ஸ்ரீமந் நாராய ணன், என்னுடைய ப்ரஹ்மஹத்தியைப் போக்கவேண்டு மென்று, என்னால் பிட்சையாசிக்கப்பட்டு பின்பு விஷ்ணு

வின் பிரசாதத்தினுல் என் கையிலொட்டிக்கொண்டிருந்த பிரம்ம கபாலமானது ஆயிரஞ்சுக்கலாய் தூளியாய்ப் பறந்து ஸ்வப்நத்தில் கண்ட தனம் விழித்துப் பார்க்கு மளவிலில்லாதது போல் போய்விட்டதென்று சொல்லியிருக்கையில் ஸ்ரீராமர் பிரம்மஹத்தி நிவாரணமாக லிங்கபூசை செய்தாரென்பது அபத்தமல்லவோ?

நான்காவது—இதன்றி ஶ்ருதியில் (அபஹதபாப்மா திவ்யோதேவ ஏகோ நாராயணঃ) என்றதில் விஷ்ணுவானவர் பாபரஹிதரென்றும்; மற்றொருஶ்ருதியில்.

அபஹதபாப்மா விஜரோவிம்ருத்யு:
விசோகோவிஜிகத்ஸঃ
அபிபாஸঃஸ்த்யகாமঃஸத்யஸங்கல்பঃ

என்று விஷ்ணுவின் அஷ்டகுணங்களைச்சொல்லும் சுருதியில் விஷ்ணு பாபரஹிதரென்றும் ஜரையாகிய கிழத்தனமில்லாமல் நித்யமான யௌவனத்தை யுடையவரென்றும் மரணமில்லாதவரென்றும் சோகமில்லாதவ ரென்றும் பசிதாகமில்லாதவரென்றும் நித்யமான இச்சையையுடையவரென்றும் (அதாவது தன் இச்சையானது மற்றொருவருடைய பிரயத்தினத்தால் மாற்றப்படாதென்பதாம்) நித்தியமான நினைவையுடையவரென்றும் (அதாவது தன் நினைவானது மற்றொருவருடையநினைவினுல் மாற்றப்படாதென்பதாம்) ஆக விஷ்ணுவின் எட்டு குணங்களைச் சொல்லுகிற இந்த ஶ்ருதியில் விஷ்ணு பாபரஹிதரென்று சொல்லியிருக்கையாலும் - உ -வது கட்சி, ௬-வது தொடரில் சொன்ன, சதபதஶ்ருதியில் சிவன் பிரம்மாவைப் பார்த்து (அநபஹதபாப்மாஹமஸ்மி) என்றதில் நான்பாபியா யிருக்கிறேனென்று சொல்லியிருக்கையாலும் - பின்னும் ஒரு ஶ்ரு

தியில் (குமார கிம்ரோதிஷ்) என்றதில் சிவனைப்பார்த்து பிரம்மா குமாரனே நீயேன் அழுகிறு யென்றுசொல்லி யிருக்கையாலும் பாபரஹிதஞன ஸ்ரீராமமூர்த்தி தன்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரம்மாவின் புத்திரனும் பாபியுமான தன்பேரனை தன்னுடைய பிரம்மஹத்திபோகும்படி பூஜித்தாரென்பதும் ஸ்ருதிவிரோதம்.

ஐந்தாவது—மற்றொரு ஸ்மிருதியில்

ஸேதும்த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய
ப்ரம்ஹஹத்யாவிமுச்யதே.

என்றதில் ஸ்ரீராமமூர்த்தியினுல் கட்டப்பட்ட சேதுவைத் தரிசித்த மாத்திரத்தில் பிரம்ஹத்தியாதி பாபங்களும் போய் இஹலோகத்தில் அவரவருடைய இஷ்ட காமியங்களும் சித்தித்துப்பரலோகத்துக்கும்ஸாதனமாமென்று சொல்லியிருக்கிறதுமன்றி அந்த ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்படியார்களுடைய பிரம்ம ஹத்தியாதி ஸமஸ்த பாபங்களையும் போக்குகின்றுரென்றும், சுருதிகளில்:

ததோவித்வாந் புண்யபாபே விதூய
நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி.

என்றதில் ஸ்ரீமந்நாராயணனை குருமூலமாய் ஆஸ்ரயித்தவனே வித்வானென்றும் அவன்புண்ணியங்களையும் பாபங்களையும் விட்டு பாபரஹிதஞய் பரப்ரம்ஹத்தோடு ஸமாஞகாரத்தை அடைகிறுனென்றும் சொன்னதில் புண்ணியத்தையும் பாபத்தையும் விடுகிறுனென்றும்.

ஆறுவது—மற்றொரு ஸ்ருதியில்

யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத
ஏவம்ஹாஸ்யஸர்வே பாப்மாநஃ ப்ரதூயந்தே.

அக்கினியில்விழுந்த தூசு எப்படி தஹிக்கப்படுகின்றதோ அப்படியே விஷ்ணுவின் திருவடிகளை ஆஸ்ரயித்தவர்களுடைய ஸர்வ பாபங்களும் நன்ருய்த் தஹிக்கப்படுகிறதென்றுப். மற்ருெருஸ்ருதியில் (அதஸோபயங்கதோபவதி) பிரபன்னனனபின்பு அவன் பாபத்தைக்குறித்துப் பயமில்லாமையை யுடைத்தாயிருக்கின்ருனென்றும். மற்ருெருஸ்ருதியில் (நபிபேதிகுதஸ்சந) அந்த விஷ்ணு பக்தன் எந்த பாபங்களைக் குறித்தும அஞ்சக்கடவனல்லன் என்றும். மற்ருெரு ஸ்ருதியில் (நகலுபாகவதா யமவிஷயம் கச்சந்தி பாகவதர்கள் விஷயத்தில் யமன் பிரவேசிக்கமாட்டான் அன்ருே? வென்றும் சாரீரகமீமாம்ஸாஸூத்ரத்தில் (உத்தரபூர்வாகயோரஸ்லேஷவிநாமெளஎன்றதில்) பூர்வாக உத்தராகங்கள் என்கிற இரண்டுவகைப்பட்ட பாபங்களும்-நசிக்கின்றன வென்றும் சொல்லியிருக்க அப்படிப்பட்ட ராமமூர்த்திக்கு பிரம்மஹத்திவந்ததென்று சொல்வது சுருதி விரோதம்.

ஏழாவது — இப்போதுசொன்ன ஸ்ருதிஸ்மிருதி ஸூத்ரங்களுக்கு திருஷ்டாந்தமாக இதிஹாசமாகிய ஸ்ரீ ராமாயணத்தில் விபீஷணுழ்வான் சரணுகதியில்

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிசயாசதே
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம்மம.

உனக்கு நான் சேஷபூதனென்று ஒருகால் சரணுகதி பண்ணினவன் எப்படிப்பட்ட பாபியா யிருந்தபோதிலும் அவனை ரக்ஷிப்பது என்விரதம் என்றும் அருளிச்செய்ததுமன்றி(தோஷோயத்யபிதஸ்யஸ்யாத்ஸதாமேதநகர்ஹிதம்) என்னுடைய அடியார்களான சாதுக்கள் தோஷத்துடனே கூடிய்வர்களா யிருந்தபோதிலும் அது எனக்குக்

முறைவாக நினைக்கத்தக்கதன்றென்றும் - பாரதம் ஹரிவம்சத்தில் கண்டாகர்ணனுடைய பதினாயிரம் பிரம்மஹத்திகளைக் கண்ணன் போக்கினதாயும் சொல்லியிருக்க, முன் சுருதிகளில் சொன்ன பாபவிநாசனுக்கு மாத்ரு த்ரோஹியாகிய ராவணனைக் கொன்றதினாலே பிரம்ம ஹத்திவந்ததென்றும் அதைப்போக்குவதற்கு பிதுர் த்ரோஹத்தால் பிரம்மஹத்தியையுடைய சிவனை ஸ்ரீராமமூர்த்தி பூஜித்தாரென்பதும் விவரணமான இதிஹாஸங்களுக்கும் விரோதம்.

ராவணனைக்கொன்றதற்கு பிரம்மஹத்திவந்ததென்று அந்த ஸ்மிருதிகர்த்தா சொல்லுவான். தலையை வெட்டினவனையும் திருடினவனையும் ஜாதிநெறிமுறை வழுவினவர்களையும் சத்ருக்களையும் வெகுஜன விரோதிகளையும் மொழிமாறிக் கோளுரைப்பவர்களையும் தரித்திரர்களைக் கெடுத்தவர்களையும் கற்புடைய ஸ்த்ரீயை இச்சிக்கின்றவர்களையும் கண்டவுடனே கொல்லும்படி மனுநீதியில் சொல்லியிருக்க பிரம்மாவையும் சிவனையும் பெற்ற ஜகந்மாதாவாகிய பிராட்டியை விபரீதபுத்திபண்ணின கர்மசண்டாளனைக் கொன்றதற்கு பிரம்மஹத்தி உண்டென்று ஒருசாஸ்திரமும் சொல்லமாட்டாது.

எட்டாவது—ஆகில், ஸ்ரீ வால்மீகத்தில்

(அத்ரபூர்வம் மஹாதேவஃ ப்ரஸாதமகரோத்ப்ரபுஃ)

என்ற ஸ்லோகத்திற்கு மஹாதேவனான சிவன் தயைபண்ணினதாய்ச் சொல்லியிருக்கின்றதே, அதற்கென்ன உத்தரமென்று கேட்டார்கள். அதற்குக் கூரத்தாழ்வான் சொன்ன உத்தரமாவது அந்தஸ்லோகத்தில் (பூர்வம்) என்ற பதம்வந்திருக்கையால் பூர்வத்தில் என்பது சேதுபந்தனத்துக்குப் பூர்வமென்றும்-மஹாதேவனென்பதற்கு

அர்த்தம் (மஹத்) என்று ஜலமாய், ஜலத்துக்கு தேவனான வருணனானவன் (ப்ரஸாதம் அகரோத்) தயைபண்ணினான் என்றர்த்தமென்றும் (மஹத்) என்கிற பதமானது ஜலத்தைச் சொல்லுகிறதென்று வைஜயந்தியென்கிற நிகண்டில் (ஸ்நேஹம் ஸ்நிஹ்பம் மஹத் சுத்தம் வாருணம் ஸர்வதோமுகம்) என்றதில்மஹந்தென்று ஜலத்துக்குப் பேராகையால் ஜலத்துக்கு தேவனான வருணன் சேதுபந்தனத்துக்குப்பூர்வம் தயைபண்ணினானென்று சொல்லவேண்டியதேயொழிய ராவணனைக் கொன்றதற்காக வந்த பிரம்மஹத்தி போக அப்போது சிவன் தயைபண்ணினாரென்று சொல்வதைப் பூர்வமென்கிற பதமானது கண்டிக்கின்றமையால் சைவர்கள் கக்ஷி நிரஸிக்கபபட்டது. இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீமத் ராமாயணத்துக்கு அத்வைதியினால் செய்யப்பட்ட மஹேஸ்வரதீர்த்தீயமென்கிற வியாக்கியானத்தில் கண்டுகொள்வது.

ஒன்பதாவது—இதன்றி சிவனுக்கு அஷ்டமூர்த்தித்வத்தில் ஜலரூப மொன்றானகையால் மஹாதேவ சப்தத்தினால் சமுத்திரமென்றே நிச்சிதம்.

(பூர்வம்-ஸேதுபந்தாத் பூர்வம்) பூர்வம் என்றபதம் சேதுபந்தனத்துக்குப் பூர்வம் (ப்ரஸாதமகரோத் ஜலோபரி ஸேதுதாரண ரூபம் ப்ரஸாதமகரோத்) பிரசாதம் செய்தானென்பது ஜலத்தின்மீது சேதுவாகிய வாராவதியை தாரணரூபமான ப்ரஸாதம்செய்தானென்றே அர்த்தம் என்றும்அன்றியில் (ப்ரஸாதம்-ஸந்நிதானரூபம்) பிரஸாதம் பண்ணினானென்பது ஸன்னிதானம் செய்தார்; ஸ்ரீராமாயணத்தில்

(தர்ஶயாமாஸசாத்மாநம் ஸமுத்ரஸஸரிதாம்பதிః
இத்யுக்தத்வாத் மஹாதேவஸ்ஸமுத்ரஏவ.

என்று நதிக்குநாயகனுன வருணனுனவன் தன்னை ஸ்வாமிஸந்நிதானத்துக்குக்கொண்டுத்வந்தானென்றுசொல்லியிருக்கையால் மஹாதேவன் ஸமுத்ரதேவனே என்று கண்டித்துவிட்டார்.

பத்தாவது—ஆனல் இராமலிங்கமென்று பேர்வந்ததற்குக் காரணமென்னவெனில் முன்சொன்ன இராமோபநிஷத்தில் இராமதாரகமந்திரத்தை உச்சரியுமென்று பகவானுன விஷ்ணு சிவனுக்கு உபதேசித்தபடியாலும் அவ்வர்த்தத்தை - பாத்மோத்தரத்தில்.

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வராநநே.

உமையுடனே சிவன் ஸ்ரீராமநாமமானது விஷ்ணுவின் ஆயிரநாமங்களுக்குச் சமானமான மாஹாத்மியமுடையதென்றும் அனேக ஶ்லோகங்களில் சொல்லியிருக்கிறதுமன்றி, ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீசுகரானவர்,

ஹஸ்தேக்ஷமாலா ஹ்ருதிராமதத்வம்
ஜிஹ்வாக்ரபாகே வரராமமந்த்ரம்,
ஸமஸ்தகே கேசவபாததீர்த்தம்
சிவம் மஹாபாகவதம்ஸ்மராமி.

என்றதில் சிவனுடைய ஹ்ருதயத்தில் ஸ்ரீராமனே ஜகத்காரணவஸ்து என்கிற தியானமும் அவனுடையநாவில் ஶ்ரேஷ்டமான இராமமந்திரமும் கையில் அம்மந்திரத்தை உச்சரிக்கின்ற ஜபமாலிகையும் அந்த இராமனுடைய ஸ்ரீபாதத்தில் பிறந்த தீர்த்தத்தை சிரசில் ஜடையில் தரித்திருக்கிறபடியாலும் சிவனை மஹாபாகவதனென்று சுகர் சொல்லியிருக்கின்றதில் சிவனுடைய ஹ்ருதயத்திலும் நாவி

னும் இராம மந்திரத்தை உச்சரிக்கின்ற காரணத்தினல் இராமலிங்கமென்ற பெபர் உண்டாயிற்று.

இராமன் பூசித்தபடியாலே இராமலிங்கமென்ற பேர் வந்ததென்று சொல்லும்பக்ஷத்தில் சிவலிங்கமென்ற பேருக்கு சிவனலே பூஜிக்கப்பட்டலிங்கமென்றுசொல்லவேண்டிவரும். ஆகையால் இராமனல் பூசிக்கப்பட்டலிங்கமென்று சொல்லக்கூடாது. இராமனை ஹ்ருதயத்தில் உடையலிங்கமென்றே ஶாஸ்திர சித்தம்.

இந்தக்கட்சியின் சமாதான சங்கிரஹம் யாதெனில்—விஷ்ணு இந்தக்கக்ஷி-சவது தொடரின்படி பாபரஹிதரென்றும், சிவன், உ-வது கக்ஷி ச-வது தொடரில் பாபியென்றும் சுருதிசொல்லி யிருக்கிறதும்தவிர, உ-வது கக்ஷி உவது தொடரின்படி சிவனுக்குப் பிதாவாகிய பிரம்மாவைப் பெற்றவரும், இந்தக்கக்ஷி உ-வது தொடரின்படி சிவனுக்குத் தன்பிதாவின் தலையைக் கொய்ததனல் வந்த பிரம்மஹத்தியைப் போக்கினவரும், ஷெ கக்ஷி க0-வதுதொடரின்படி சிவனுடைய ஹ்ருதயத்திலும் நாவிலும் வசிக்கப்பட்டவரும் அந்த ராமமூர்த்தியாயிருக்க அவருக்குப் பிரம்மஹத்தி வந்ததாயும் அதைச்சிவன் போக்கினதாயும் சொல்வது ஶ்ருதி புராணங்களுக்கு விரோதிக்கிறதுமன்றி மாச்சரியவார்த்தையென்பதும் வெளியாகிறது.

௬-வது கிருஷ்ணன் கைலாசத்துக்குப் போனது,

உ-வது கட்சி உ, ங-வது தொடர்களில் கற்பங்கள் தோறும் பிரம்மாவினிடத்தில் ருத்ரன்ஜனித்ததாயும் மற்

றொருகற்பத்தில் ருத்ரன் நேரேவிஷ்ணுவினிடத்தில் ஜநித்த தாயும் சொல்லியிருக்கையால் தேவரிஷி பிராமணர் முதலான சாதுக்களை இரக்ஷிக்கைக்காகத்தானவதரித்தபோது தனக்குப்பவுத்திரனும் புத்திரனுமாகிய சிவனைக்கடாக்ஷித்தருளத் திருவுள்ளமாகிக். கைலாஸத்துக்கெழுந் தருளின வளவில்; பாரதம், ஹரிவம்சத்தில்—

க இதி ப்ரஹ்மணோ நாம
ஈசோஹம் ஸர்வதேஹிநாம்
ஆவாம் தவாங்கே ஸம்பூதௌத
ஸ்மாத் கேசவநாமவாந்.

என்று உ-வது சக்ஷி ரு-வது தொடரின் விவரப்படி உமக்குக் கேசவனென்கிற திருநாமம் உண்டாயிற்றென்றும்

(அத்யமேமகுடாரூடம் தத்பாதாப்ஜயுகம்ஹரே:)

என்று கிருஷ்ணனை சிம்ஹாசனத்தில் எழுந்தருளப் பண்ணி சிவன் தரையில்விழுந்து சேவித்து உம்முடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் என்னுடைய சிரசின் மீது தரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்ததாயும் ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கிறதுமன்றி உ-வது சக்ஷி ச-வது தொடரில் சொல்லியஸ்ருதியில் சிவன் சிரமத்தினாலே தபசுசெய்து ஸம்ஹாரகர்த்தாவானதாய்ச்சொல்லி யிருக்க கிருஷ்ணன் கைலாசத்துக்குப் போய்ச் சிவனைக் குறித்துத் தபசுசெய்தா னென்பதும் புத்திரவரம் பெற்றானென்பதும் ஸ்ருதிக்கும் ஸாத்விக புராணங்களுக்கும் விரோதம்.

ரு-வது, விஷ்ணு சக்கரம் பெற்றாரென்பது.

2-வது சக்ஷி, 4-வது தொடரில், சதபதஸ்ருதியில்— (யத் ஸ்ரமாத் தபஸோபி ஜாதோவஸீதி அப்ரவீத்) என்ற

தில் சிவன் விஷ்ணுவைக்குறித்துதபசுசெய்து ஸம்ஹார கர்த்தாவானதாயும் பிரம்மாவிடத்தில் பிறந்ததாயும் ஶ்ருதி சொல்லி யிருக்க, பிரம்மாவைப்பெற்ற விஷ்ணுவானவர் இந்தச் சிவனைப் பரத்வபுத்திபண்ணி ஆயிரம் கமலங்களி ஞலே பூஜித்தா ரென்பது ஶ்ருதிவிரோதம்.

ரு-வது சக்ஷி, லிங்கபூசை செய்ததாய்ச் சொல்லும் பிரகரணத்தில். ஷ சக்ஷி, க-வது தொடரில், சிவன் ஆயி ரம் செண்பக புஷ்பங்களிஞலே விஷ்ணுவை அர்ச்சிக்கும் போது ஒரு புஷ்பங் குறைந்து தன் மூக்கை யரிந்து அர்ச் சித்த அந்த மஹாபக்தியை விஷ்ணுவானவர் பார்த்து, அறுந்த லிங்கங்கள் சிவனுக்கும் பார்வதிக்கும் உண்டாகும் படி வரங்கொடுத்ததாய்ச் சொல்லியிருக்கும் புராண வச னத்துக்கும் விரோதம்.

முதலாவது—க-வது சக்ஷி, க-வது தொடரில், உத ஹரித்த, சாந்தோக்கியத்தில் (ஹிரண்மயவபுః த்ருதஶங்க சக்ர:) என்றதில் சூரியமண்டலத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் ஸ்வர்ணமயமான திருமேனியும் சங்க சக்ரங்களுந் தரித்திருக்கிருனென்றும், தியானசுருதியில்-

சங்கசக்ர தரம்தேவம்
கிரீடாதி விபூஷிதம்
அக்நிமண்டலமத்யஸ்தம்
த்யாயே யஜ்ஞபதிம்ஹரிம்

என்றதில் அக்கினிமண்டலத்தில் சங்க சக்ரதரனைக் கிரீடாதி மகரகுண்டலங்களால் அலங்க்ருதனையிருக்கும்ஹரி யைதியானிக்கிறே னென்றும், மற்றொருஶ்ருதியில் (சக்ரம் பிபர்த்திவபுஷாபிதப்தம்) விஷ்ணுவினுடைய தப்தமான

சக்ரத்தை பிராம்மணர்கள் தங்கள் புஜத்தில் தரிக்கத்தக்க தென்றும்,

இரண்டாவது—மற்றெருஶ்ருதி பிரமோபநிஷத்தில் (நேமிநாதப்ததநுः ப்ரஹ்மண ஸாயுஜ்யம் ஸலோகதாமாப்நோதி) என்றதில் (நேமிநா) சக்கரத்திஞலே (தப்ததநு:) அக்கினியில் தப்தமான சக்கரத்தின் அங்கிதத்தோடு கூடின சரீரத்தையுடைய (ப்ராஹ்மண:) பிராமணன், (ஸாயுஜ்யம்) விஷ்ணுஸாயுஜ்யத்தையும், (ஸலோகதாம்) ஸாலோக்கிய மாகிய பரமபதத்தையும், (ஆப்நோதி) அடைகிருன் என்றும்

மூன்ருவது:— அதர்வண மஹோபநிஷத்தில் பிரம்ம சூக்தத்தில்.

தக்ஷிணேது புஜேவிப்ரோ
பிப்ருயாத்வை ஸுதர்சனம்
ஸவ்யேது சங்கம் பிப்ருயாதிதி
ப்ரஹ்ம விதோவிதுः

பிராஹ்மணர்கள் வலதுபுஜத்தில் சுதர்சனமென்கிற சக்கரத்தையும் இடதுபுஜத்தில் சங்கத்தையும் தரிக்கத்தக்க தென்று பிரம்மவித்துக்களறிவர்கள் என்றும்.

நான்காவது—காண்டத்தில்:

(தேவாஸோ யேநவித்ருதேந
பாஹுநா ஸுதர்ஶநேந
ப்ரயாதம் ஸ்வர்க்கமாயாந்தி
தாமலோக விஸ்ருஷ்டவீ தஸ்வயந்தி
ப்ரஹ்மணௌவே ஸ்ஸர்வம்
ஸர்வாவைதேவதாநாம் ஸர்வாவை விப்ராணும்

ஸர்வாவை க்ஷத்ரியாணாம்
ஸர்வாவை வைஶ்யாநாம்
சூத்ராணாமித்யக்நிநாவை ஹோத்ரா
தப்தம் சக்ரம் த்விபுஜேத்
தார்யேதோர்த்தவபுண்ட்ர மாலி கேத்
தஸ்மாத்வி ரேகப்பவதி
ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம் புநராகமநநசேதி
ஸலோகதாமாப்நோதி

என்று ஸமஸ்ததேவர்களும் ஸமஸ்த பிராமணர்களும் ஸமஸ்த க்ஷத்திரியர்களும ஸமஸ்தவைசியர்களும் சூத்திரர்களும் அக்கினியினுலே தப்தம்பண்ணின சக்கிராங்கிதத்தை இரண்டுபுஜங்களிலும்தரிக்கக்கடவர்கள். இடைவெளியோடு கூடின ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரிக்கக்கடவர்கள். அந்த பிராம்மணன் விஷ்ணுசாயுஜ்யத்தைபடைந்து ஸ்வர்க்காதிகளைப்போல் மறுபடியும மீளுகிறுனென்ப தில்லை. யென்றும்,

ஐந்தாவது—மயித்திராவருண சாகையில்.

ஸாமவேதே ப்ரதிபாத்யதே
ததாஹி-பவித்ரமித்யக்நிః
அக்நிர்வை ஸஹஸ்ராரః
ஸஹஸ்ராரோ நேமிః
நேமிநா தப்ததநுः

ப்ராஹ்மணஸாயுஜ்யம் ஸலோகதாமாப்நோதி என்றபடி ஸமஸ்த தேவர்களும் ஸமஸ்த பிராம்மணர்களும் ஊர்தவபுண்ட்ரங்களும் அக்கினியில்தப்தமானசக்கிராங்கிதமுந்தரிக்கக்கடவர்கள் என்றும்,

ஆறுவது—விதிரூபமாயும் ருக்சாகை - எ அஷ்டகம் ௬-ம்: அத்தியாயத்தில், அ-ம் வர்க்கத்தில்.

பவித்ரந்தே விததம்ப்ரஹ்மணஸ்பதே
ப்ரபுஃகாத்ராணி பர்யேதி விஸ்வதஃ
அதப்ததநூர்நதாமோ அஸ்நுதேத
ஸத்வஹம் த்யக்தமாநதஃ

என்றபடி - தப்தசக்கராங்கிதமில்லாத சரீரத்தைப் பார்க்கக்கூடாதென்று நிஷேதித்திருக்கின்றதும்.

பின்னும்—யசுர்வேதாரணம் - முதல்பிரஸ்னத்திலும்,

சாமவேதம உத்தரவிருக்கில்-கூ-ம் அத்தியாயத்திலும் அதர்வணத்திலும் ருக்வேதத்தில் - வர்க்கசங்கிதையிலும் பிரஹதாரண்யோபநிஷத்திலும், கடவல்லியிலும், காடகமென்கிற சுருதியிலும்.

கைவல்லிய துங்கசாகை முதலிய இத்யாதிசுருதிஸ்மிருதிபுராணாதி ஸத்வப்ரமாணங்களாலும் - விஷ்ணுவுக்குச் சக்கரம் அனாதியென்றும், பிரம்மருத்திரேந்திராதி தேவர்களும் சக்கராங்கனபரர்களாக வேண்டுமென்றும், பின்னும் ஸமஸ்தபிராம்மணர்களும் - க்ஷத்திரிய வைசிய - சூத்திராதிகளும் அக்கினியாலே தப்தம்பண்ணப்பட்ட சக்கரத்தை வலதுபுஜத்திலும், சங்கத்தை இடதுபுஜத்திலும் தரித்தவர்களாய்ப் பரப்பிரம்மமான ஸ்ரீமந்நாராயணனுடைய சாயுஜ்யத்தை அடைகிறார்களென்றும் சொல்லியிருக்கின்றது.

விஷ்ணுவின்சக்கரம் அநாதியென்று சொல்லியிருக்க, ஜலந்தராசுரனைக் கொல்லுவதற்கு விஷ்ணுவின் உந்தியில் பிறந்த பிரம்மாவின் புத்திரனை சிவனிடத்தில் விஷ்ணு

சக்கரம் பெற்றுரென்பது இப்போதுசொன்ன சுருதி ஸ்மிருதிபுராண பாஞ்சராத்திராதி பிரமாணங்களுக்கெல்லாம் விரோதமாகும்.

ஏழாவது—மேலும் அகஸ்திய சம்ஹிதை ருத்ரகீதையில்

ஶஸ்த்ர ராஜம் ஸமாராத்ய
ஸம்ஹ்ருவர்த்த ஜம்தவஸ்வயம்
ஸஏவதத்தவாங்சூலம்
க்ருபயா ஸஹிதோமம
தஸ்யைவாஜ்ஞாம் புரஸ்க்ருத்ய
சராசர குரோரஹம்
கல்பாந்தே ஸம்ஹரிஷ்யாமி
ததா தத்பாவ பாவிதம்

என்றதில் - சஸ்திரங்களுக்கு இராஜனை திருவாழி ஆழ்வானை ஆராதித்து சூலத்தை நான்பெறும்படி பிரம்மா ஆக்கியாபித்தபடியே, திருவாழி ஆழ்வானிடத்தில் நான் சூலத்தையடைந்து, பிரம்மாவின் அபிப்பிராயப்பிரகாரம் கல்பாந்தத்தில் ஸம்ஹரிக்கிறே னென்று சொல்லியிருக்கையாலும், மேற்படி கக்ஷி ரத்தாய்ப்போய்விட்டது.

௯-வது மன்மதனைச் சிவன் தஹித்தானென்பது.

பாம்புகடித்தால் விஷத்தைத் தலைக்கேறவொட்டாமல் விஷத்தைத் தீர்க்கிறது அரிதேயொழிய, பாம்பைக் கொல்லுகிறது அரிதல்ல.

முதலாவது—இங்கே மன்மதனால் எய்யப் பட்டணத்தினாலேயே விகாரத்தை யடையாமலிருந்தாலல்லவோ, சிவனுக்கு மாஹாத்மியஞ்சொல்லவேண்டியது. அந்த விகாரத்தினாலே பார்வதியுடனேபுணர்ந்து வீரியம்பெருகி, அந்த வீரியத்தில் நின்றும் இரஸ-கெந்தக-பாஷாணங்களும்-சுப்பிரமணியனும் பிறந்ததாய் புராணங்களில் சொல்லியிருக்கிறதுமன்றி,

இரண்டாவது—துரோணாசாரியர் தேவிகளுக்கு நிதம்பப் பிரதேசம் அழகாயிருக்குமென்று தேவர்கள் சொல்லிக்கொண்டிருந்ததைச் சிவன்கேள்விப்பட்டு, அதை அல்குலைத் தரிசிக்கவேண்டுமென்று அதிதிரூபமாய்வந்து பிட்சையாசிக்க, துரோணாசாரியருடைய நியமனத்தால் அவருடைய தேவிகள் அமுதுகொண்டுவர, அப்படிக்கொண்டு வந்ததைக் கொள்ளோம், நிருவாணமாய்க் கொண்டுவந்து படைக்கவேண்டு மென்ன, துரோணாசாரியர் கோபித்து அதிதி பிரார்த்திக்கிறபடி படைக்கவேண்டுமென்று ஶாஸ்திரமிருக்கையால், துகிலைக்களைந்து உன் அளகபாரத்தை வஸ்திரமாய்ப் பண்ணிக்கொண்டு அமுதுபடை யென்று நியமித்த பிரகாரம் தேவிகொண்டு வர, சிவன் பாஞ்சபௌதிக சம்பந்தமுடையவராய், யோனி தரிசனத்தி லிச்சையுடையவராய், வாயுவைக்கொண்டு அளகபாரத்தை நீங்கப்பண்ணி, அத்தால்யோனிதரிசனமாய் வீரியம் ஸ்கலிதமாய் அந்த வீரியமானது பெட்டை அசுவத்துக்காக ஆறவைத்திருக்கும் கொள்ளில் விழுந்து, அந்தக்கொள்ளை அசுவம் புஜித்து கர்ப்பமாகி, சிவ வீரியத்தால் பிறந்த சிசுவுக்கு அசுவத்தாமனென்ற பெயருண்டாயிருக்குங் கதை பாரதத்தில் சொல்லியிருக்கையாலும்.

மூன்றாவது—புருஷன் ஸ்திரீவேஷம் போட்டதைக் கண்டு மயங்கி, வீரியம் சிவன் தொடையின்மீது பெருகி

சாஸ்தாவென்ற புத்திரனைப்பெற்றபடியாலும், மன்மதனைச் செயித்தானென்று சொல்வது அஸங்கதமாய்விட்டது.

நான்காவது—விஷ்ணுபக்தர்களில் சிறந்தவராய் சூரியவம்சத்தில பிறந்த க்ஷத்திரியர்களுக்கு மூலபுருஷராயிருக்கும் இக்ஷ்வாகுமஹாராஜன், சத்தியலோகத்தில் பிரம்மாவுக்குத் திருவாராதனமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரங்கநாதனை பூலோகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று தபஞ்செய்யும்போது, அந்த தபாக்கினியால் இந்திரன் முதலான தேவர்கள் சகிக்கமாட்டாமல் மன்மதனையேவ, அவன் தன் பஞ்சபாணங்களைப் பிரயோகித்தபோது க்ஷ இராசன் அந்த பாணங்களினால் கலங்காமல், மன்மதனாலே எய்யப்பட்ட புஷ்பங்களையெடுத்து மன்மதனை அர்ச்சிக்க, மன்மதன் முதலான தேவர்கள் வெட்கிப் பிரம்மாவுடனே முறையிட, அந்த பிரம்மாவானவர் பிரத்யக்ஷமாகித் தம்முடைய திருவாராதனமான ஸ்ரீரங்கநாதனை இக்ஷ்வாகுவுக்குக் கொடுத்த கதை, காருடபுராணம் தசாத்தியாயங்களில் சிவன் நாரதருக்கு உபதேசித்ததாய்ச் சொல்லியிருக்கையால், மன்மதனை ஜயித்த இக்ஷ்வாகு மஹாராஜாவுக்கும் பரத்வஞ் சொல்லவேண்டியிருக்கும். ஆகையால் மன்மதனை ஜயிக்காதவனை ஜயித்தாரென்றுசொல்லி அத்தாலே அவருக்குப் பரத்துவமுண்டென்று சொன்னபக்ஷம் நிஷேதிக்கப்பட்டது.

ஐந்தாவது—

ப்ரஹ்மாத்யா ஸ்ஸகலாதேவா:
மநுஷ்யா:பஶவஸ்ததா
விஷ்ணுமாயா மஹாவர்த்தே
மோஹாந்த தமஸாவ்ருதா:

என்றதில் பிரம்மருத்திரேந்திராதி சகல தேவர்களும் அப்படியே மனுஷ்யர்களும் பசுபட்சி மிருகாதிகளும் விஷ்ணுவினுடைய மஹாமாயங்களிலே சுழலப்பட்டவர்களாய், அத்தால் மாயையென்கிற அந்த தமஸ்ஸில் உழன்றுகொண்டு திரிகிருர்களென்றும்.

ஆருவது—

ப்ராஜாபதிஞ்ச ருத்ரஞ்ச அஹமேவ ஸ்ருஜாமிவை
தௌதுமாஞ்ச விஜாநீதோ மமமாயா விமோஹிதௌ

என்று பிரம்மாவையும் ருத்ரனையும் நானே யன்ருே சிருஷ்டிக்கிறேன், அவர்களிருவரும் என்னுடைய பெருமையை அறியமாட்டார்கள். பின்னும் என்னுடையமாயையினுலே நன்ருக மோஹிக்கப்பட்டார்களென்ற பகவத் வசனப்பிரகாரம் முன்சொன்ன நடத்தைகளிருக்கிறபடியால், மன்மதனைச் சிவன் ஜயித்தாரென்பது சர்வாபத்தம்.

—∞∞—

எ-வது விஷத்தைச் சிவன்பானம் செய்தா னென்பது

விஷத்தைச்சிவன் பானம்பண்ணினபடியால், சிவனுக்குப் பரத்வமுண்டென்ற கட்சிக்கு உத்தரம்.

முதலாவது—விஷத்தை போதைக்காகப் பானம்பண்ணுகிற சம்பிரதாயம் சித்தாதிகளுக்குமுண்டு, அத்தால் சிவனுக்குப் பெருமையுண்டென்று சொல்லவொண்ணுது.

இரண்டாவது—விஷமானது பாம்பினுல் சரீரத்தில் கடிக்கப்பட்டு இரத்தத்தில் கலந்து தலைக்கேறினதை அநேகர் திருப்பியிருக்கிருர்கள்.

மூன்றாவது.—இதல்லாமல் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை இரணியகசிபுவானவன் வாசுகி முதலான அஷ்டமஹாநாகங்களைப் ப்ரேரேபித்துக் கடிக்க விடும்போது, அந்தவிஷங்களையெல்லாம் அவர் அமிருதம்போலே அமுதுசெய்து விட்டார்.

நான்காவது—(ஸ்தந்யம் தத்விஷ ஸம்மிஸ்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ:) என்றதில் - பூதனையினுடைய ஸ்தன்யத்தில் கலந்திருக்கும் விஷத்தை சிசுத்வத்தையுடைய கண்ணன் அமுது செய்ததாய் பாகவதத்தில் சொல்லியிருக்கின்றது.

ஐந்தாவது—திருப்பாற்கடல் கடையச்சே வாசுகியின் வாயில் பிறந்த விஷத்தை தேவர்கள்கண்டு சஹிக்கமாட்டாமல் யந்து அஜ்ஞதையினாலே தங்களுக்குநேரிட்ட முன் ஆபத்தைக்குறித்து, அருகிருந்த உபேந்திராவதாரமாகிய பகவானிடத்தில் முறையிடாமல், காகுத்தன்-கட்டுவாங்கதன் - முசுகுந்தன்-தசரதன் - அருச்சுனன் - இவர்களிடத்தில் முறையிட்டுக்கொண்டதுபோல கயிலாரத்திலிருந்த சிவனிடத்தில் விஷத்தைப் பானஞ் செய்து, தங்களை இரட்சிக்கவேண்டுமென்று முறையிட்டார்கள், அதைக் கேட்ட சிவன் அப்படியே இரட்சிக்கிறேனென்று அபயப் பிரதானம்பண்ணி, சமுத்திரம்போலே பெருகிவருகிற விஷத்தைக் கண்டு ஒரு ஹூங்காரம் பண்ணினார். அத்தால் அந்த விஷமானது தடைபடாமல் மேன்மேலும் பெருகி வருகிறபடியைக் கண்டு, ஶ்வேதத்வீபத்தில் ஶ்வேதரூபியாயிருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவை த்தியானித்தார். அந்த பகவான் பிரத்தியட்சமாகி என்னவேண்டுமென்று கேட்க, விஷத்தைப் பானம்பண்ணி இரட்சிக்கிறேனென்று தேவர்களுக்கு வரங்கொடுத்தேன், அந்த விஷமானது என் ஹூங்க

காரத்தால் சடைபடால் வருகையால், அந்த விஷத்தைத் தேவரீர் பானம்பண்ணி எங்களை இரட்சிக்க வேண்டு மென்று சிவன் பிரார்த்திக்க, அப்போது பகவானான விஷ்ணு இப்போது ஹூங்காரம் பண்ணுமென்று நிய மிக்க, சிவன் மறுபடியும் ஹூங்காரம் பண்ணினதில், அந்த விஷமானது பருவதம்போலத்திரண்டு வந்தது, அதைக் கையிலேந்திக்கொள்ளுமென, ஏந்திக்கொண்ட சிவனைப் பார்த்துப் பானஞ்செய்யுமென்று விஷ்ணு நியமிக்க, சிவன் இவ்வளவும் நான் புஜிக்கமாட்டேனென்று சொல்ல, பின்பு, ருக்வேதத்தில் அ-ம் அத்தியாயத்தில் உங-ம் வாக்யத்தில்,

கேஶ்யாக்நிம் கேஶிவிஷம் கேஶீபிபர்திரோதஸீ
கேஶீவிஷஸ்யபாத்ரேண, யத்ருத்ரேண பிபத்ஸஹ,

என்றதில்-ருத்ரனுகிற பாத்திரத்தினல் அவன்கையி லிருந்த விஷத்தை மயிரழகாலே கேசியென்ற பெயரையு டைய விஷ்ணுவானவர் பானம்பண்ணினதாய்ச் சொல்லி யிருக்கின்றது.

ஆறுவது—சேஷித்த விஷத்தை, (அதாவது பகவான் தான் அமுதுசெய்து மிச்சமான விஷத்தைப்) பானம் பண்ணுமென்று ஷை சிவனுக்கு நியமிக்க, அதுவுந் தான் நேரே பானம்பண்ணமாட்டேனென்று, அச்சுதானந்த கோவிந்த என்கிற நாமத்திரய மஹாமந்திரத்தை பிரணவ நமః பதங்களுடனே உச்சரித்து புஜித்தானென்றகதை- பாத்மோத்தரத்தில் நஎ-வது அத்தியாயத்தில்,

அச்யுதாநந்தகோவிந்தப், மந்த்ரமானுஷ்டுபம்சுபம்
ஒந்நமஸ்ஸம்புடீக்ருத்வா ஜபந்விஷதரோஹரః,

என்று சொன்னது பூமியில் பிராம்மணர்களுக் கெல் லாம் பாடமாயிருக்கிறது. விஷத்தைச் சிவன் பானம்பண்

ணின கட்சி இப்படியிருக்கிறபடியால், விஷபானத்தினல் சிவனுக்கு பரத்வஞ்சொல்ல வொண்ணுதென்று கண்டித்தார்.

௮-வது இயமனைக் கர்வபங்கஞ்செய்து மார்க்கண்டேயனுக்குச் சிரஞ்சீவி பட்டங் கொடுத்தது.

முதலாவது—இயமனைக் கர்வபங்கம் பண்ணினதாலே சிவனுக்குப் பரத்வஞ்சொல்லவொண்ணுது. மார்க்கண்டேயனுக்குச் சிரஞ்சீவிபட்டங்கொடுத்ததுமெய்யேயாகில், அப்போது அவருக்கும் பெருமைச்சொல்லலாம். சிரஞ்சீவி பட்டங் கொடுத்ததாலே பரத்வஞ்சொல்லப்புக்கால், பலி-வியாசர் - அனுமான் - விபீஷணர் - கிருபாசாரி-பரசுராமன் இவர்களுக்குச் சிரஞ்சீவிபட்டங் கொடுத்தவர்களுக்கும் பரத்வஞ் சொல்லவேண்டிவரும்.

இரண்டாவது—சுருதியில்

ஏகோஹவைநாராயண ஆஸீத்
நப்ரஹ்மாநேசாநঃ
நஹிமேப்ருதிவ்யாநநக்ஷத்ராணி.

என்றதில்-பிரம்ம ருத்திராதிகள் இறந்து - நாராயணனொருவனே முடிவிலிருக்கிறனென்றும்,

மூன்றாவது— (யஸ்யப்ரஹ்மசக்ஷத்ரம் சோபேபவத ஓதநঃ) என்றதில் - யாவனொருவ நாராயணனுக்கு பிரம்மாவும், தாமசகுணத்தாலே க்ஷாத்திரத்தைவஹித்தசிவனும், அன்னஸ்த்தாநமாகிறர்களென்றும்;

நான்காவது—(ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம்) என்றதில் யாவனொருநாராயணனுக்கு மிருத்யுவாகிய பிரளயகால ருத்திரன்கறியமுது ஊறுகாய்ஸ்தாந மாகிறானென்றும்;

ஐந்தாவது—மற்றொருசுருதியில்—

தஸ்யேந்த்ராவ ய்ரீருபேண
தநுர்ஜாமாசிந்நத் ஸ்வயம்
நதராத்தித் யத்ரஸ்ய
பிரஸத்வ தேவாஸப்ரவர்க்கோபவத்
ருத்ரஸ்ய் சிரப்ரதிததாதி.

என்றதில் தேவர்கள் அசுரர்களை ஜயிக்கும்படி, விஷ்ணுவிடத்தில் சிலதேஜசும் ஒருதனுசும் வேண்டி யாகஞ் செய்தார்கள். அப்போதந்த யாகத்துக்கு-சிவனை யசமானனாக வைத்தார்கள். விஷ்ணுவினுடைய பிரசாதத்தால் விஷ்ணுவின் தேஜசும் ஒருதனுசும் யாகத்திலிருந்து உண்டாகி, சிவனிடமாய்ச் சேர்ந்தன, யாகபாகமான தேஜசை தேவர்களுக்கு பகிர்ந்துகொடாமல் தாமேயபஹரித்தார்.

ஆறுவது—பின்பு தேவர்கள் தங்களுக்கு யாகபாகமானதேஜசைக் கொடுக்கவேண்டுமென்று, நிர்பந்திக்கையில், சிவன் கொடுக்கமாட்டேனென்று தம்மிடத்திலிருந்த தேஜசின் பலத்தாலே யாகத்தில் உண்டான தனுசை வளைத்து யுத்தஞ்செய்கையில், தேவர்கள் அந்ததனுசுக்கு முன்னிற்கமாட்டாமல் ஓடிப்போனார்கள். அதைக்கண்டு-சிவன் அபஹசித்தார், (அதாவது பரிஹாசம் பண்ணினார்.) அதைக்கண்டு அத்தேஜஸானது சிவனைநோக்கி தேவர்களுக்கு யாகபாகங் கொடாமற்போனகுற்றம் ஒன்று, தேவதைகளைப்பரிபவம் பண்ணின குற்றமொன்று, இதுவுமல்லாமல் உன்னுடைய பராக்கிரமத்தைக்கண்டு நீயே மெச்சிக்

கொண்ட குற்றம் ஒன்று, ஆக இம்மூன்று குற்றங்களாலே-உன்னிடத்தில் நாமிருக்கக்கடவோமல்லவென்று அத்தேஜசுவிட்டு நீங்கிடபோய்விட்டது. முன்தேஜஸால் இருந்த பலத்தாலே வளைத்த தனுசை முகவாய்க் கட்டையின்கீழ் ஊன்றிக்கொண்டு சோகத்துடன் நிற்கையில் தேவர்கள் சிவனைக்கொல்வதற்கு இதுவே நல்ல சமயமென்றுயோசித்து, இந்திரனைப் பெருங் கறையனைப் வடிவெடுத்து, பிகுவுடன் கட்டியிருக்கிற நாணியை யறுத்துவிட்டால் அந்த வில்லின் நாணறுதலினால் சிவன் தலை யறுப்புண்டுபோகுமென்று இந்திரனைப் பிரார்த்தித்தார்கள். இந்திரன் தன்வாயில் நீரூறும்படிவரங்கேட்டபடியே தேவர்கள் வரங்கொடுத்தார்கள். அந்தப்பிரகாரமாய் இந்திரன் பெருங்கறையானைய் வடிவெடுத்து, நாணியை யருத்துவிட்டான். அவ்வறுதலினாலே சிவன் தலை அறுப்புண்டு, அறுப்புண்ட தலையானது யாகத்துக்கு ஒருவித பிரவர்க்கிய பாத்திரமாய்விட்டது. பின்பு பார்வதியானவள் மங்கலிபப்பிட்சை கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவான் வந்து வேறு சிரசு கொடுத்து பிழைப்பூட்டினதாய் சுருதியில்சொல்லியிருக்கையாலும்.

ஏழாவது—மற்றொரு சுருதியாகிய தைத்திரியோபநிஷத்தில்.

ஹரிம்ஹரந்தமநுயாந்திதேவா:
விஸ்வஸ்யேசாநம்வ்ருஷபம்மதீநாம்.

என்றதில் - நரசிம்மனைக் கொல்லும்படி சரபரூபமாய் வந்த சிவனைக்கொன்ற ஹரியைத் தேவர்கள் பின்சென்றார்கள் என்று சொல்லியிருக்கையாலும்.

இந்த சுருதிக்கு - சைவர்கள் (ஹரம்ஹரம்) என்று இரண்டுபதமும் த்விதியாந்தமாயிருக்கையால், விஸ்வத்து

க்கு ஈசானனென்ற விசேஷணபதத்துக்கர்த்தம் - உலகத்தை நியமிக்கப்பட்டவனென்றர்த்தமாகையால், அந்த விசேஷணந்தாலே ஹரியைக்கொன்ற அரனைத் தேவர்கள் பின் சென்றார்களென்று அர்த்தஞ் சொன்னார்கள்.

எட்டாவது—அதற்குக் கூரத்தாழ்வான் சிறுவனுக்கு ஈசாநனென்றபெயர் விஷ்ணுவின் உந்தியிற்பிறந்த பிரம்மாவினாலே கொடுக்கப்பட்ட எழுநாமங்களில் ௪-வது திருநாமமாகையாலே, பிரம்மாவின் புத்திரனான ஈசானன் விஷ்ணுவைக் கொன்றானென்று சொல்வது, இதுவரையில் சொல்லிக்கொண்டுவந்த சுருதிகளுக்கு விரோதிக்கிறதல்லாமல் அந்தச் சுருதியின் கருத்தை, காருடபுராணத்தில்,

ஹந்துமப்யாகதம் ரௌத்ரம்சரபம்நரகேஸரீ
நகைர்விதாரயாமாஸ ஹிரண்யகசிபும்யதா

என்றதில்-கொல்லுகைக்காக வாராநின்றுள்ள ருத்திரனாகிய சரபத்தை, நரகேசரியானவர் - ஹிரணியகசிபுவை நகங்களினாலே எப்படிகிழித்தாரோ அப்படியே கிழித்தெறிந்துவிட்டதாய்ச் சொல்லியிருக்கையால், ஷை சுருதிக்கு

விஶ்வஸ்யேஶாநம்தம்ருத்ரம்ஹரம்து
விஷ்ணுதேவாঃ அநுயாந்தி

என்று விற்பத்தி பண்ணி அந்தச்சுருதிக்கர்த்தம் அருளிச்செய்தார். அதாவது, விச்வத்துக்கு ஈசாநனான அந்த ருத்திரனைக்கொன்ற ஹரியை தேவர்கள் பின் சென்றார்கள் என்று சொல்லி, இந்தக்கடசியைக் கண்டித்துவிட்டார்.

ஒன்பதாவது—இப்படி சுருதிகளில் அநேகம் பிரகரணங்களில் சிவனிறந்து நாராயணனொருவனே முடிவிலிருக்கின்றதாய்ச் சொல்லியிருக்கையால், இறக்கின்ற தன்மையையுடைய சிவன் மார்கண்டேயனுக்கு இறவாமல் வரங் கொடுத்தானென்பது அசங்கதம்.

பத்தாவது—ஆகில் மார்கண்டேயனுக்குச் சிரஞ்சீவி பட்டம்வந்த வரலாறு எவ்விதமெனில்,

ஆராத்யோ பகவாந்விஷ்ணுஃ
ஏகஏவமயாச்யுதஃ
கேசவாத் தார்யதேக்ருச்நம்
ஜகத்ஸ்தாவர ஜங்கமம்
புக்திமுக்திப்ரதோதேவஃ
ஸயேவபுருஷோத்தஃ
தஸ்மாத் ஸர்வேஶ்வரம் விஷ்ணும்
வாஞ்சிதார்த்த பலப்ரதம்
ஆராதய ருஷீகேசம்
யதீச்சஸிபராங்கதிம்.

என்னுல் ஆராதிக்கப்படுமவன் விஷ்ணு ஒருவனே, ஸ்தாவர ஜங்கமரூபமான ஜகத்தெல்லாம கேசவனுலே தரீக்கப்பட்டிருக்கின்றது, தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்குவன் அந்த விஷ்ணு ஒருவனே, ஆகையால், ஸர்வேஶ்வரனையும். எல்லாருடைய ஹிருதய கமலங்களில்வியாபித்திருக்குமவனையும், அவரவர்கள் கோரின அர்த்தங்களைக் கொடுக்கப்பட்டவனையும் இருக்கின்ற இருஷீகேசனை, பரமமானகதியை இச்சிப்பாயாகில், ஆராதிக்கக் கடவாயென்று சொல்லி, மார்க்கண்டேயனை விஷ்ணுவினிடத்தி லழைத்துக்கொண்டுபோய்ச் சிரஞ்சீவி பட்டமும் அவரிடத்தில் இடைவிடாத பக்தியும், மார்க்கண்டேயனுக்குச் சிவன் வாங்கிக்கொடுத்ததாய்ச் சொல்லியிருக்கின்றது.

இவ்வர்த்தத்திற்குச் சான்றோராட்சியாசச் சடகோபருடைய வசநத்தையும் அருளிச்செய்கிறார்.

கண்டுந்தெளிந்துங்கற்றூர்கண்ணற்காளன்றியாவரோ
வண்டுண்டுமலர்த்தொங்கல்மார்கண்டேயனுக்குவாழுநாள்
இண்டைச்சடைமுடியீசனுடன்கொண்டுசாக்கெல்ல [மே
கொண்டங்குத்தன்னேடுங்கொண்டுடன்சென்றதுணர்ந்து

கற்றூர் வேதங்களைப் படித்தவர்கள்—கண்டும்-கண்ண னவதரித்த மறுநாள்காலையில் நீராட்டும்போது நாவழிக் கையில் கண்ட விசுவரூபத்தையும் மண்தின்ற பருவத்தில் அசோதைப் பிராட்டி, வாயிலிருந்த மண்ணைத் துடைத்தபோதும் அக்ரூரனை அழைத்தபோதும், பொய்யாசத்தின்போதும், பாரதம் முதல்நாள் யுத்தத்தின் போதும் பிரகாசித்த விசுவரூபங்களைக்கண்டும்—தெளிந்தும்-பாரதத்தில்.

பார்த்தோபஹிதம் மதுஸூதநஸ்ய
பாதாரவிந்தார்ச்சித சித்ரபுஷ்பம்,
ததர்சகங்காதரமௌளிமத்யே
பபூவவீரக்ருத நிச்சிதார்த்தஃ.

என்றதில்பார்த்தனுன அர்ச்சுனன்மதுசூதனனுடைய பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்த விசித்திரமான புஷ்பங்களை, அன்றிராத்திரி கங்காதரன் தன்சிரசில்காண்பித்து, பாசுபத மந்திரத்தை யுபதேசித்தபோது (ஸதுபார்த்தோ மஹாமுனிஃ) என்கிறபடியே சிறந்த ஞானிகளில் முன்னே சொல்லும்படியான அர்ச்சுனன்-சுருதியில்.

ப்ரஹ்மண்யோ தேவகீபுத்ரோ
ப்ரஹ்மண்யோ மதுஸூதநஃ

என்றதில் - தேவகீபுத்திரன் பரப்பிரம்மமென்று சொன்னது நிச்சயமாயிற்றென்று தெளிந்தவகையும், தெரிந்தவர்கள் கண்ணனுக்கன்றி இதராளுக் காளாவர்களோ வென்றும்-வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு,

வண்டுகளாலே பானம்பண்ணப் பட்டிருந்துள்ள மலர் மாலையையணிந்த மார்க்கண்டேயரிஷிக்கு, வாழுநாள்-சிரஞ்சிவி பட்டத்தை - இண்டைச்சடைமுடி ஈசனை சிவன்—உடன்கொண்டு சாச்சொல்ல - தம்முடனேகூட விஷ்ணுவினிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகையில், (உசாச்செல்ல - உசாவிச்செல்ல,) வென்றபதம், கடைக்குறையாய் உசாசசெல்ல வென்றாகிடக்கிறதாய், அததாலே முன் மார்க்கண்டேய புராணத்தில்சொன்ன சரித்திரங்களைப் பேசிக்கொண்டுசெல்ல,) விஷ்ணுவினிடத்தில் சிரஞ்சீவிபட்டத்தைக்கொண்டும்—உடன் சென்றதும் மார்க்கண்டேயருடைய பிரார்த்தனைப் பிரகாரம் அவருடைய ஹிருதயத்தைவிட்டு நீங்காதிருக்கின்றேனென்று உடன் சென்றதும், உணர்ந்தும் - அறிந்தும், இதரருக்காளாவர்களோ வென்றருளிச்செய்த பாசுரத்தையுஞ் சொல்லி மேற்படி சட்சியைக் கண்டித்து விட்டார்.

கூ வது சிவன் திரிபுரவிஜயம் செய்தார்.

முதலாவது—திரிபுராதிகளாகிய காலாடன், தாருகாடன், வித்துவின்மாலி, என்று மூன்றுபேர் பிரம்மாவின் வரத்தினாலும், வேதத்தினிடத்தில் பிராமண்ய புத்தியாலும், அவர்களுடைய ஸ்த்ரீகளின்கற்பின் பலத்தினாலும், இராக்ஷஸவிசுவகர்மாவான மயனால் சிருஷ்டித்த சஞ்சீவி சித்தரஸகூபமென்கிற அமிர்தக்கிணற்றினாலும், பிரபலராய் தேவர்களையும் பூலோகத்தாரையும் ஆகாசத்தில் திரியும்படியானமூன்று பட்டணங்களினாலே நாசஞ்செய்து கொண்டு வருகையில், அதினாலே இந்திராதி தேவதைகளெல்லோரும் போய்ச் சிவனிடத்தில் முறையிட்டார்கள்.

இரண்டாவது—அப்போது சிவன் தனக்குப் பசுபதியென்ற பேர்கொடுத்தால், நாம்திரிபுரஸம்ஹாரஞ் செய்கின்றோமென்று வரங்கேட்டார். தேவர்களப்படியே வரங்கொடுத்தார்கள். பிறகு தேவகூட்டத்தைக்கூட்டிக்கொண்டு திரிபுரத்தின் மேரிலே தண்டெடுத்துப்போய் பெரியயுத்தஞ் செய்து, அநேகங்கோடி இராட்சஸர்களைக்கொல்ல, இறந்த இராக்ஷஸர்களை சித்தரஸகூபமென்கிற கிணற்றில்தள்ள, அவர்கள் மறுபடியும் அறுத்த பயறு முளைத்தாற்போல சீவித்து காலமே யுத்தத்துக்கு வந்துகொண்டிருந்தமையால், சிவன் அவர்களை ஜெயிக்க முடியாதவராய், ஸர்வாந்தர்யாமியாகிய ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து ஹோமஞ் செய்தார்.

ஆச்ரிதபாரதந்த்ரரான ஸர்வேச்வரன் பிரத்யக்ஷமாகி உனக்கு வேண்டும்வரங் கேட்டுக்கொள்ளென்றான். சிவன் நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பஞ்செய்து, திரிபுர தானவர்களை ஜயிக்கும் உபாயம் தேடவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

மூன்றாவது—ஸர்வேச்வரன் பிரம்மாவைக் கன்றாக வரக்காட்டி; சித்தரஸகூபமென்கிற கிணற்றுக்குக்காவலாயிருந்த கிங்கரர்களை மயங்கச்செய்து, தாம் இறந்துபோகிற நிலையையுடைய பசுவாய், கிணற்றினருகேசென்று அதிற்பிரவேசித்து அமிர்தத்தையெல்லாம் நாவினால் கிரகித்தும், பௌத்தசாஸ்திரமென்கிற ஒரு பொய் நூலைக்கற்பித்து, தானொரு பௌத்ததேவதையாய், தானவரிடத்திற்சென்று வேதத்தில் பிரதிபத்தி இல்லாமலிருக்கும்படி போதித்தும், அவர்களுடைய ஸ்த்ரீகளிடத்தில்சென்று புத்திரன் வேண்டியிருக்குமவர்கள் அசுவத்தவிருக்ஷத்தைப் பூஜித்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டால் புத்திரர்

களுண்டாவர்களென்று போதித்தும், அவர்கள் ஆலிங்கனம்பண்ணிக்கொள்ளும் வேளையில் விருக்ஷரூபமாய் இருந்து தான் மாயாபுருஷனுப் அவர்களுடைய கற்பை யழித்தும், இவ்விதங்களாக திரிபுரதானவர்களினுடைய பராக்கிரமங்களை விஷ்ணுவானவர் அந்தரியாமியாயிருந்து, ஒருவராலுஞ் சலிப்பிக்க அரிவாயிருக்கின்றமஹாமேருவை வில்லாக்கி சிவனை பரிக்கும்படிச்செய்தும், அஸ்திரத்தின் நுனியில் தாமிருந்து ஸம்ஹரித்தும், ஹரிபஞ்சரமென்கிற மந்திரத்தைநங் சிவனுக்கு உபதேசஞ்செய்தும், திரிபுரதானவர்களை சிவன் ஜயிக்கும் படிசெய்தான். இதற்குப்பிரமாணம்.

நான்காவது—பாரதம்-கர்ணபருவத்தில்.

விஷ்ணுராத்மாபகவதః
பவஸ்யாமிததேஜஸః
தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம்
ஸவிஷேஹேமஹேச்வரः

என்றதில்-அமிதமான தேஜஸ்ஸோடு கூடின பவனென்னும் பேருடைய சிவனுக்கு விஷ்ணுவானவர் அந்தராத்மாவாயிருந்த காரணத்தினலே மஹம்மேருவாகிய வில்லினுடைய நாணிமை சிவனிழுத்துயுத்தஞ்செய்தாரென்று சொல்லியிருக்கின்றது.

பௌத்த தேவதையா யவதரித்தது விஷ்ணுவின் தசாவதாரத்தில்காண்க.

ஐந்தாவது—ஆகில், அந்த திரிபுரயுத்தத்தில் விஷ்ணுவானவர் ருஷபமாய்த் தாங்கினதற்குக் கருத்தென்னவெனில், பூமியினுடைய சத்தை யெடுத்து அச்சாய்த்திரட்டி, தேவர்களால் நிர்மிக்கப் பட்டிருக்கின்ற இரதத்தை-பூமி

யானது தரிப்பதற்குச் சக்தியில்லாமலிடிந்து பாதாளலோகத்தில் விழுந்தது. அங்கே கபிலருஷியாயவதரித்திருந்தாம் சிவனை இரட்சிக்கிறோமென்றுவரங்கொடுத்த காரணத்தினாலே ருஷபமாய் வடிவெடுத்து அந்த இரதத்தை தாங்கினார்.

ஆறுவது—அத்தாலே சிவனுக்குப் பரத்வஞ்சொல்ல நினைக்குமளவில், மஹாவராஹமாய் அவதரித்து, இந்தப் பூமியையெல்லாம் சுமக்கிறதாய் புராணங்களில் சொல்லியிருக்கையால் பூமியிலுள்ளவர்களுக்கெல்லாம் பரத்வஞ் சொல்லவேண்டி வரும் ஆபத்தில் இரட்சிப்பது-ஸர்வேஶ்வரனுக்குக் கடமையாகையால், அத்தால் சிவனுக்குப் பரத்வஞ் சொல்லக்கூடாது.

ஏழாவது—விஷ்ணு ருஷபமாய்த்தாங்கின காரணத்தாலே, சிவனுக்கு ருஷபவாஹநம் உண்டாச்சுதென்னில் விஷ்ணுவுக்கு வாஹனம் கருடனும் இந்திரனுக்கு ஐராவதமும் இயமனுக்கு எருமைக்கடாவும் வாஹனமாயிருக்கின்றதுபோல், சிவனுக்கும் ருஷபவாஹனம் எப்போதுமுண்டாயிருக்கையால், இந்த ஹேதுவினாலுண்டாயிற்றென்று சொல்லக்கூடாதென்று கண்டித்துவிட்டார்.

சிவன் விஷ்ணுவுக்கு வாஹனமாயிருக்கிறதற்கு ஸ்ரீ ராமாயணத்தில் சிவன் அநுமானாயவதரித்தானென்றதில் கண்டுகொள்வது.

௪௦ வது - தக்கன் யாகத்தைச் சிவன் அழித்தான்

முதலாவது—தட்சப்ராஜாபதியானவர் விஷ்ணுவைக் குறித்து யாகஞ்செய்தபடியால், அப்போது விஷ்ணுவான

வர் அங்கே எழுந்தருளவேயில்லை. மற்ற இந்திராதி தேவர்களை வைத்துக்கொண்டு யாகஞ்செய்கையில், சிவன் தன்னை வரவழையாமல் யாகம்செய்ததைக்குறித்து வீரபத்திரனைச் சிருஷ்டித்து, யாகத்துக்கு வந்தவர்களை யழிக்கும்படி உத்தரவுசெய்தார்.

இரண்டாவது—அந்தப் பிரகாரமாக வீரபத்திரனும் தேவர்களைச் சின்னபின்னஞ்செய்து தக்ஷப் பிரஜாபதியை ஹிம்ஸித்ததின்பேரில், தக்ஷப்பிரஜாபதியுஞ் சிவன் தாமஸுணைகையால் அவனுக்கு யாகத்தில் யாகபாகமில்லாமல் போகக் கடவதென்றும், ஸ்மசாநத்தில் வசிக்கக்கடவனென்றும், பேய்களுக்கும் பூதங்களுக்கும் நாதனுகக்கடவனென்றும் சபித்தார்; அதற்குப்பிரதிபாய் நந்தியானவன் பிராம்மணர்கள் அர்த்தகாம பராளாய்ப்போகக்கடவர்களென்றும், பின்னும், அநேகவிதங்களாகச் சபித்தான்.

மூன்ருவது—இவ்விதங்களாக யாகமழிந்தபின்பு, பிரம்மா இந்திராதி தேவர்கள் யாகத்தினிடத்தில்வந்து தக்ஷப் பிரஜாபதியை யெழுப்பி, அவரால் கொடுக்கப்பட்ட சாபத்தை அவரால்பிரதிஹரஞ்செய்து சிவனுக்கு யாகத்தில் சேஷங் கொடுக்கும்படியாகவும் சிவனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுத்தபின்பு - புனஸ்நானம்பண்ணி மற்ற திக்பாலகர்களுக்கு ஹவிர்ப்பாகங் கொடுக்கும்படி நிச்சயித்து, தக்ஷப் பிரஜாபதியைக் கொண்டு யாகம் நிறைவேற்றிவைத்து, பூர்ணுஹுதிவேளையில் விஷ்ணுவானவர் எழுந்தருளி தக்ஷன் கோரின பலத்தைப் பிரஸாதித்து எழுந்தருளினதாய் ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கையால், விஷ்ணுவந்ததாயும் வீரபத்திரனல் அபஜயப்பட்டதாயும்சொல்வது வேதவிருத்தமென்று ரத்தாக்கினர்.

நான்காவது—எப்படியெனில், சுருதியில் (யஸ்யப்ரஹ்மச க்ஷத்ரம்சோபேபவதஓதனம்) என்றதில்-கற்பாந்தத்தில் பிரம்ம ருத்திரர்களை அன்னமாய் புஜிக்கிறனென்றும், சுருதியில் (ம்ருத்யுர்யஸ்யோபஸேசனம்.) என்றதில்-பிரளய காலருத்திரன் பிரம்மாவாகிய அன்னத்துக்கு உபஸேசனமென்கிறகறிபதார்த்த ஸ்தானமாகிறனென்றும் சொன்னதை, வியாசர்வேதத்தின் ஆதியிலும்-அந்தத்திலும்-உச்சரிக்கின்ற ஹரிஃஓம என்றபதத்தில், ஹரிஃ என்றபதத்துக்கு ஸஹஸ்ரநாம வியாக்கியானத்தில்.

ப்ரஹ்மாணமிந்த்ரம்ருத்ரஞ்ச
யமம்வருணமேவச
நிக்ருஹ்யஹராமேத்யஸ்மாத்
தஸ்மாத்ஹரிரிஹோச்யதே.

என்றதில்-பிரம்ம ருத்திரேந்திராதி தேவர்களைக் கற்பாந்தத்தில் விஷ்ணுவானவர் ஹரிக்கிற காரணத்தினலே அவருக்கு ஹரியென்கிற நாமதேய முண்டாயிற்றென்று-ஸஹஸ்ரநாம வியாக்கியானத்திலும் அருளிச்செய்திருக்கிறார்.

அந்த வியாக்கியானத்துக்கு பாஷ்யம் பண்ணின சங்கராசாரியரும் சங்கரபாஷ்யத்தில் அப்படியே சொல்லியிருக்கையால், சிவன்கதி இப்படியாகுமளவில், விஷ்ணுவானவர் அந்தயாகத்துக்கு அப்போது வந்திருந்தால், சிவனல் உண்டாக்கப்பட்ட வீரபத்திரனை ஸம்ஹரிக்க அவருக்கு அரிதோவென்று அந்தக்கட்சியைக் கண்டித்துவிட்டார்.

ககவது சிவன் அருச்சுனனுக்கு பாசுபதங் கொடுத்தார்.

சிவன் அருச்சுனனுக்குப் பாசுபதங்கொடுத்ததாய்ச் சொல்லுகிற கக்ஷிக்கு உத்தரம்.

முதலாவது—அருச்சுனன் பாசுபத அஸ்திரத்துக்குக் கைலாசத்திற்குப்போய் மந்திரம்பெற வேண்டுமென்று கண்ணனுடனே விண்ணப்பஞ்செய்கையில், கண்ணன் அருச்சுனனைக் குறித்துக் கைலாசத்திற்குப்போய் எந்தெந்தப் புஷ்பங்களினாலே சிவனை அர்ச்சிப்பாயோ அந்தப் புஷ்பங்களினாலே என் திருவடிகளில் அர்சிப்பையாகில், சிவன் உனக்குச் சொப்பனத்தில் பாசுபதமந்திரத்தை உபதேசிப்பானென்று அருளிச்செய்தபடியே, அருச்சுனன் கண்ணன் திருவடிகளில் அர்ச்சிக்க, அன்றுராத்திரி இவனுடைய சொப்பனத்தில் சிவன்வந்து கண்ணன் திருவடிகளிலர்ச்சித்த புஷ்பங்களைத் தமது சிரசு முதலிய அவயவங்களிற்காட்டிப் பாசுபத மந்திரத்தை உபதேசித்துப்போனார்.

இரண்டாவது—இதற்குப்பிரமாணம்-பாரதத்தில்

பார்த்தோபநீதம் மதுஸூதநஸ்ய
பாதாரவிந்தார்சித சித்திரபுஷ்பம்
ததர்சகங்காதர மௌளிமத்யே
பஹுவவீர: ச்ருதநிச்சிதார்த்த:

என்றதில் பார்த்தனென அருச்சுனன் மதுசூதனனாகிய கண்ணனைக்கிட்டி அவன்பாதாரவிந்தங்களில் அர்ச்சித்த புஷ்பங்களைக் கங்காதரனாகிய சிவனுடைய சிரசிலேகண்டு, கிருஷ்ணனை, சுருதியில், (ப்ரஹ்மண்யோதேவகீபுத்ரோ - ப்ரஹ்மண்யோமதுஸூதந:) என்றதில் தேவகீபுத்திரனாகிய கண்ணன் பரம்பிரம்மமென்றும்,

மூன்றாவது—மற்றொரு சுருதியில் (அங்காநி அந்யாதே
வதா:) என்றதில் எம்பெருமானுக்கு பிரம்மருத்திரேந்திரா
திதேவர்கள் அவயவங்களா யிருப்பார்களென்றுசொல்லி
யிருக்கையால் இந்தக்கண்ணனே பரம்பிரம்மமென்றும்,
வீரனான அருச்சுனனானவன் பண்ணப்பட்டிருக்கின்ற நிச்ச
யத்தோடுங் கூடினவனாய் தான் ஸத்தைபெற்றானென்றும்
சொல்லியிருக்கையால், சிவன் பாசுபதங்கொடுத்ததினாலே
அவனுக்கொரு மாஹாத்மிய முண்டாக மாட்டாதென்று
கண்டித்தார்.

௧௨ வது சிவன் சரபப்பக்ஷியாய்வந்து நரசிம்மனை ஜயித்தான்.

சிவன் சரபப்பட்சியாய்வந்து நரசிம்மனைக் கொன்றா
னென்பதற்கு உத்தரம்-8-வது கக்ஷியில் மார்க்கண்டேய
னுக்குச் சிரஞ்சீவி பட்டங்கொடுத்ததாய்ச் சொல்லுங்கதை
யில் வரும் பிரமாணங்களால் கண்டுகொள்வது.

௧௩-வது மோஹினிவேஷந்தரித்தவிஷ்ணுவினிடத்தில் சிவன் புணர்ந்து சாஸ்தாவைப்பெற்றான்

முதலாவது—தேவர்களை இரட்சிக்க வேண்டுமென்கிற
திருவுள்ளத்தாலே, அசுரராக்ஷஸர்களுக்கு அமிர்தங்கொடா
மல் வஞ்சிக்கும்பொருட்டு மோஹினி வேஷந்தரித்து, தே
வர்களுக்கு அமிர்தத்தைப்பகிர்ந்தபோது, சிவன் கைலாசத்
தில் விஷத்தைப் பானம்பண்ணி மயக்கங்கொண்டிருந்த

வன், மறுநாள் விஷ்ணு மோஹினி வேஷந்தரித்த விருத்தாந்தங்கேள்விப்பட்டு, ஸ்வாமியைத் துதித்து அந்த மோஹினி வேஷத்தை நான் சேவிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

இரண்டாவது—அப்போது விஷ்ணுவானவர் நீர் தாமஸராகையாலே அந்த வேஷத்தைக்கண்டு பரிக்கமாட்டீரென்று சொல்லக்கேளாமல், மறுபடியும் பிரார்த்திக்கையில் தன்னுடையமாயையினாலே ஒரு உத்தியானவனமும் அதில் ஊசலில் ஒரு ஸ்த்ரீயுமாகக் காண்பித்தார். சிவன் இதைக்கண்டமாத்திரத்தில், கானலை நீரென்று நினைத்து ஓடும் மானைப்போலே அந்த ஸ்த்ரீயினிடத்திற்குச் சென்றபோது, அந்த ஸ்த்ரீயானவள் குதித்தோடி மறைந்துபோய் விட்டாள். அந்த ஸ்ரீயைக்கண்டு வீரிய ஸ்காலித்யமாகித் தொடைவழியாய் பெருகிக் கட்டைவிரலிற் பிரவஹித்தபோது, சாஸ்தா பிறந்தான்.

மூன்றாவது—இப்படி ஸ்த்ரீசம்பர்க்கமில்லாமல்பிள்ளை பிறக்கின்ற வழக்கமுண்டோவெனில், பிரம்மாவானவர் மேனகையைச் சிருட்டித்து, அவளைப்பார்த்து மோஹித்து, அத்தால் வீரியம் ஸ்கலிதமாச்சுது, அத்தைத் நம்முடைய வலது பாதத்தால் அரக்கினத்தாலே, அறுபதினாயிரம் பிந்துவாகி-கூடித-வாலகில்யாளாய்ப் பிறந்ததாய்ப் புராணங்களிற் சொல்லியிருக்கையால், ஸ்த்ரிசம்பர்க்கமில்லாமல் பிள்ளை பிறக்கமாட்டாதென்கிற சங்கை வேண்டுவதில்லை.

இந்தப்பிரகாரம் சிவனுடையகாலின் கட்டை விரலில் சாஸ்தா பிறந்ததாய், ஆக்நேயபுராணத்திலும் வாயவீயத்திலும் சொல்லியிருக்கையால், மோஹினியாகிய ஸ்த்ரீயி

னுடனே புணர்ந்து சாஸ்த்ராவைப் பெற்றானென்று சொல்வது புராணவசனத்திற் கத்தியந்த விரோதம்.

ப்ரஹ்மாத்யாஸ்ஸகலதேவாஃ
மநுஷ்யாஃ பசவஸ்ததா
விஷ்ணுமாயாமஹாவர்த்தே
மோஹாந்ததமஸாவ்ருதாஃ

என்றதில்—பிரமனை ஆதியாக உடைய ஸமஸ்த தேவர்களும், அப்படியே மனுஷ்யர்களும் மிருகங்களும், விஷ்ணுவின் மாயையிலே மயங்கி வர்த்திக்கின்றார்களென்று சொன்னபடியே, விஷ்ணுவைக்கண்டுமயங்கின சிவனைப் பரனென்று சொல்லக்கூடாதென்று கண்டித்தார்.

௧௪வது சிவன் அநேககோடி ஜனங்களினாலே பூஜிக்கப்படுகிறான்.

முதலாவது—யாராலும் பூசிக்கப்படுகிற சிவனானவன்

கைலாஸசிகரே ரம்யே
விஷ்ணுமாராத்யசங்கரஃ
உபவிஷ்டஸ்ததோ வக்தும்
பார்வதீம்சங்கரோப்ரவீத்.

என்றபடியே கைலாஸசிகரத்தில் தான் சந்தோஷசித்தத்தை யுடையராய், நிக்ருஷ்டமான சம்மாரத்தொழிலினின்றும் நீங்கிப் பர பதத்திற்சென்று பிரப்மாநந்தத்தை அனுபவிக்கவேண்டுமென்று விஷ்ணுவை ஆராதிக்கின்றேனென்று பார்வதியுடனே சொன்னதாய், பாத்மோத்தரத்தில் சொல்லியிருக்கின்றதுமன்றி, தன்லிங்கம் அறுந்துவிழுப்போது: செண்பகபுஷ்பங்களாலே விஷ்ணுவை அர்ச்சித்த

தாய், ௩-வது சக்ஷி-௧-வது தொடரில் பிரமாணஞ்சொல்லி யிருக்கையாலும்,

இரண்டாவது—கிருஷ்ணன் கைலாசத்துக் கெழுந்தருளும்போது கிருஷ்ணனை சிம்மாசனத்தின்மீது எழுந்தருளப்பண்ணி, (அத்யமேமகுடாரூடம் த்வத்பாதாப்ஜயுகம் ஹரே:) என்று-தேவரீருடைய இரண்டுதிருவடிகளையும் என்னுடைய சிரசின்மீதில்வைத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தசதை, ஸ்ரீபாகவதத்திற் சொல்லியிருக்கையாலும்,

மூன்றாவது—வெகு ஜனங்களாலே பூஜிக்கப்பட்டசிவனைப் பெற்றவன்பிரம்மாவென்றும், அவனைப்பெற்றவன் விஷ்ணுவென்றும், ௨-வது சக்ஷி-௧-வது தொடரில் சுருதிகள் கோஷிக்கின்றமையாலும், வெகுஜனங்களால் பூசிக்கப்படுவதாலே சிவனுக்குப்பரத்துவமுண்டென்று சொல்வது சுருதிவிரோதம்.

கரு-வது சிவன் தன்னைப் பூஜித்தபேருக்கு சகலஐசுவரியங்களும் கொடுக்கிறான்.

பாரதம் ஹரிவம்சத்தில் சிவனுக்குக் கண்டாகர்ணனென்னப்பட்ட அசுரன் பிணவிருந்திட்டபோது, ஒருநாள் சிவன் சந்தோஷித்து உனக்குவேண்டியவரங்கேட்டுக் கொள்ளென்றான். அப்படி அசுரன் நீர், ஹிரணியன்ஹிரணியகசிபு, இராவணன், கும்பகர்ணன், பௌண்ட்ரகவாசுதேவன், பாணாசுரன் முதலான பேர்களுக்குக்கொடுத்த ஐசுவரியங்களை விஷ்ணு அழித்து நாசஞ்செய்தமையால், அந்த ஐசுவரியத்தில் எனக்கு ஆசையில்லை. ஒருநாளும் அழிவில்லாமல் சாஸ்வதமாய் எல்லா அதிசயங்களும் நிறைந்திருக்கின்ற முக்திபென்றும், மோக்ஷமென்றும், மஹானந்தமென்றும் சொல்லும்படியான அந்த மோக்ஷ

வீட்டை எனக்குப் பிரசாதிப்பீரென்று கேட்டதற்கு, அவர் சொன்னதாவது.

கிருஷ்ணன் கைலாசத்துக்கு நாளை எழுந்தருளுகிறான் அவன் வரும் மார்க்கமாகிய இன்னவிடத்தில், அவனைக் கண்டு சேவித்து உனக்குவேண்டிய மோக்ஷத்தைக் கேட்டால் அவன் கொடுப்பானென்றுசொல்ல, அதுபிரகாரமே மறுநாள் அசுரன் ஒருபிராமணனைக் கொன்று கிருஷ்ணனுக்கு அர்ப்பணஞ்செய்யும்போது, கிருஷ்ணன் நீயாரென்றுகேட்க, அசுரன் சொன்னதாவது.

முதலாவது—

முக்திம்ப்ரார்த்தயமாநம்மாம்புராஹத்ரிலோசந:
முக்திப்ரதாதாஸர்வேஷாம்விஷ்ணுரேவஸநாதந:

என்றதில்-முக்தியை ப்ரார்த்தித்த வென்னைக்குறித்து முக்கண்மூர்த்தி சொன்னதாவது, யாவருக்கும் முக்தியைக் கொடுக்கப்பட்டவன் ஸநாதனப் பிரம்மமாகிய விஷ்ணுவேயென்று சொன்னபடியால், நான் தேவரீரிடத்திற்கு வந்தேனென்று சொன்னான்.

இரண்டாவது—அசற்குக் கண்ணன் சந்தோஷித்து-சுருதியில்

யந்நதேவாநமுநயோநசாஹம்நசசங்கர:
ஜாநந்திபரமேஸ்ஸ்யதத்விஷ்ணோ: பரமம்பதம்.

என்றதில் பிரம்மாவானவர், யாதொருதேவர்களாலும் ஸனக ஸநந்தனாதி ருஷீச்வாராலும், சிருஷ்டிகர்த்தாவாகிய என்னாலும், சங்கரனாலும் அறியவொண்ணாதது பரமேசுவரனாய் விளங்காநின்றுள்ள அந்த விஷ்ணுவின்பரமபதமென்று சொல்லும்படியான அப்படிப்பட்ட மஹாதை

சுவரியத்தைக் கண்டாகர்ணனுக்குக் கண்ணன் கொடுத்ததாய்ச் சொல்லியிருக்கையால், இந்த ஐசுவரியத்துக்கு முன்னே சிவன் வேண்டிய வரங்களைக் கொடுத்தானென்னபது பரிஹாஸாஸ்பதமென்று கண்டித்தார்.

மூன்றாவது—ருக்வேதத்தில்-௮-ம்-அஷ்டகம், ௭-ம்-அத்தியாயம், ௰-ம்-வர்க்கத்தில், ஸ்ரீமஹாலட்சுமியானவள்-தவஞ்செய்த சேதனர்களுக்கு சதுர்த்தசபுவனசிருஷ்டி-கர்த்தாவாகிய பிரம்மாவாகவும் ஸம்ஹார கர்த்தாவாகிய சிவனாகவும் திரிலோகாதிபத்தியமுடைய இந்திரனாகவும், அஷ்டவசுக்களாகவும் ஆகும்படி வரங்கொடுக்கிறாளென்று சொல்லியிருக்க, அந்த சுருதி வசனங்களை அறியாமல் சிவன் வேண்டியவரங்களைக் கொடுக்கிறாரென்று லஜ்ஜையில்லாமல் சொன்னீர்களென்றும்,

நான்காவது—விஷ்ணுவினாலே கொடுக்கப்பட்ட இஹலோக சம்பத்தானது சாஸ்வதமாயிருக்கத்தக்கதென்றும், ஒருவராலும் அழிக்கப்படாததென்றும், சிலரையெடுத்து உதாரணமாயருளிச்செய்கின்றார்.

அவர்களாவார்—ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான், மஹாபலி சக்கரவர்த்தி, ஸ்ரீவிபீஷணாழ்வான், கிருஷ்ணாவதாரத்தில்-ஸ்ரீகுலேசர். இவர்களுக்குக் கொடுத்த ஐசுவரியம் சாஸ்வதமாயும், பிரம்ஹ கற்ப பரியந்தம் அநுபவிக்கும்படியிருப்பதென்றும், அல்லாமலும்; சிறுவனாகிய - த்ருவச்சக்கரவர்த்திக்கு - இஹலோகத்தில் சக்கிரவர்த்தித்வமான ஐசுவரியங்கொடுத்து, அவன் காலஞ்செய்தபின்பு முன்பில்லாத ஒரு பதத்தை மஹம்மேருவின் உச்சியில்ஏற்படுத்தி, அதற்கு த்ருவ பதமென்று பேரிட்டு நவக்கிரகங்களை நியமிக்கும்படியான அதிகாரமுங்கொடுத்தபடியால், இவர்

ளுக்கு முன்னே சிவன் ஐசுவரியங்கொடுக்கப்பட்டவ ரென்று சொல்வது அசங்கதம்.

ஐந்தாவது—இவருக்கு ஐசுவரியங் கொடுக்கும்படியானவராம் விஷ்ணுகொடுத்தாரென்று, பாத்மோத்தரத்தில் மோஹனசாஸ்திர உற்பத்தியைக் குறித்தகதையைச்சொல்லிக் கண்டிக்கிறார். அதாவது பாத்மோத்தரத்தில் பார்வதியுடனே சிவன் வைஷ்ணவர்களுக்குத் திருமண்காப்புவிதியைச்சொல்லும் பிரகரணத்தில், பார்வதியானவள் உலகத்தாருக்கு ஊர்த்வபுண்டர விதியை விதிக்கிற நீர், பஸ்மந்தரிக்கிறதற் கென்னகாரணமென்று ப்ரச்நம்பண்ண, அதற்குச்சிவன்,

ச்ருணுதேவிப்ரவக்ஷ்யாமி । த்குஹ்யம் பரமோச்யுதம்
நவக்தவ்யம் த்வயாசச்சித்ஜநஷூசதிதம்மயா.

என்னால் சொல்லப்பட்ட அர்த்தம் - அற்புதமாயும் தேவரஹஸ்யமாயும்-இருப்பதொன்றுகையால், நீயொருவருக்குஞ் சொல்லக்கூடாதென்று சொல்லி.

ஆறுவது—பின்னும்

நமுசாத்யாமஹாதைத்யா புராஸ்வாயம்புவேவாத்பவே
மஹாபலபரீவாரா । ஹவீர்யாமஹௌஜஸ:

முற்காலத்தில் ஸ்வாயம்பு மனுவந்தரத்தில் மஹத்தானபலங்களையும் சேனைகளையும் தேஜசுக்களையும் விஷ்ணுவினிடத்தில் பக்தியினால் அடையப்பட்டவர்களாய்.

ஸத்வகர்மரதாபூத்தா: ஸர்வபாபவிவர்ஜிதா:
த்ரயீதர்மயுதாஸ்ஸர்வே பகவத்பக்திஸம்யுதா:.

சாத்விக கர்மத்தில் நிரதர்களாயும், அத்தால் பரிசுத்தாளாயும், சர்வபாபங்களில் நின்றும் விடப்பட்டவர்களாயும்

நிர்ஜிதாங்ஸகலாந்தேவாந்
அவ்யாஹத பராக்ரமாந்
பதாநிதேஷாம்ஸம்ஜக்ருஹு:
பலவீர்யஸ்ப்ருஹாந்விதாந்

ஒருவராலேயுஞ் ஜெயிக்கவரிதாயிருக்கின்ற பராக்கிரமங்களையுடைய தேவர்களின்பதங்கள் முன்சொன்ன அசுரர்களாலே கிரஹிக்கப்பட்டது.

ததோதேவகணாஸ்ஸர்வே பக்ராஇந்த்ரபுரோகமா:
விஷ்ணோஸ்ஸமீபமாகம்ய பயார்த்தாச்சரணங்கதா:

பின்பு தேவகூட்டங்கள் யாவரும் இந்திரனை முன்னிட்டவர்களாய்க்கொண்டு விஷ்ணுவின் சமீபத்திலேபோய் பயஸ்தாளாய் சரணாகதிபண்ணினார்கள்.

ஏழாவது—

இத்யாகர்ணய்ஹரேர்வாக்யம்
தேவாநாம்அபயார்த்திநாம்
தாநவத்பாந்வதிஷ்யாமிஇதி
உவாசபுருஷோத்தம:

இவ்விதமாக அபயார்த்திகளான தேவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டு; அவ்வசுரர்களை நான்வதிக்கிறேனென்று புருஷோத்தமன்சொல்லி.

த்வம்ச ருத்ரமஹாபாஹோ
மோஹ சாஸ்த்ராணிகாரயா
தர்சயித்வால்ப மாயாஸம்
பலம்சீக்ரம்ப்ரகல்பயா

ஓ ருத்திரனே நீர் அசுரராக்ஷஸர்கள் மோஹிக்கும்படி மோஹனசாஸ்திரத்தைப் பண்ணக்கடவது மல்லாமல்

அவர்கள்கோரின கோரிக்கைகளைச் சீக்கிரத்தில் கொடுக்கக் கடவீரென்று விஷ்ணுவினாலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வரத்தினாலே, தன்னையடைந்தவர்களுக்கு வரங்கள்கொடுக் கிறபடியால், அத்தால் சிவனுக்குமாஹாத்மியஞ்சொல்லக் கூடாதென்று கண்டித்தார்.

௧௫-வது தசாவதாரமெடுத்த விஷ்ணுவினாலே சிவன் பூஜிக்கப்பட்டாரென்பது.

முதலாவது—௫-வது-சட்சி-௩-வது தொடரில் ருக் வேதத்தில் ௮-ம் அஷ்டகத்தில், ௭-ம் அத்தியாயம், ௰-வர்க்கத்தில், தபஸ்ஸுபண்ணின சேதனரை மகிழ்ச்சிபெற்ற சதுர்முகனாகவும், சங்கரனாகவும், இந்திரனாகவும், அஷ்ட வசுக்களாகவும் அனுக்கிரஹிக்க, அத்தாலே பிரம்மருத்தி ராதிகள் சிருஷ்டிசம்ஹார முதலான தொழில்களை அவரவர் கள் செய்கிறார்களென்று சொல்லியிருக்கையாலும்,

இரண்டாவது—பிரம்ம ருத்திரேந்திராதி தேவர்கள் மஹாமேருவின் உச்சியில்நின்று துஷ்டநிக்கிரஹம் சிஷ்ட பரிபாலனம் பண்ணவேண்டுமென்றும், அதற்காகத்தேவ ரீர் பூமியில் திருவவதாரஞ்செய்யவேண்டுமென்றும் க்ஷீரா ப்தி நாதனைப்பிரார்த்திக்க இவர்கள் முறையைக்கேட்டு ஸ்வாமி பிரத்தியக்ஷமாய், அப்படியே அவதாரஞ் செய் கிறோமென்றும், அதில் நாம் இராமாவதாரஞ்செய்யும் போது, பிரம்மாவை ஜாம்பவனையும், ருத்திரனை அனுமானை யும், இந்திரனை வாலியாயும், சூரியனை சுக்கிரீவனையும் மற்று முள்ள தேவர்களை வானரங்களாயும், அவதரிக்கும்படி யாய்க் கட்டளையிட்ட சரித்திரம் இதிஹாசமான் வால்மீகத்

வண்டுகளாலே பானம்பண்ணப் பட்டிருந்துள்ள மலர் மாலையையணிந்த மார்க்கண்டேயரிஷிக்கு, வாழுநாள்-சிரஞ்சீவி பட்டத்தை - இண்டைச்சடைமுடி ஈசனான சிவன்—உடன்கொண்டு சாச்சொல்ல - தம்முடனேகூட விஷ்ணுவினிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகையில், (உசாச்செல்ல - உசாவிச்செல்ல,) வென்றபதம், கடைக்குறையாய் உசாச்செல்ல வென்றாகிடக்கிறதாய், அத்தாலே முன் மார்க்கண்டேய புராணத்திற்சொன்ன சரித்திரங்களைப் பேசிக்கொண்டுசெல்ல,) விஷ்ணுவினிடத்தில் சிரஞ்சீவிபட்டத்தைக்கொண்டும்—உடன் சென்றதும் மார்க்கண்டேயருடைய பிரார்த்தனைப் பிரகாரம் அவருடைய ஹிருதயத்தைவிட்டு நீங்காதிருக்கின்றேனென்று உடன் சென்றதும், உணர்ந்தும் - அறிந்தும், இதாருக்காளாவர்களோ வென்றருளிச்செய்த பாசுரத்தையுஞ் சொல்லி மேற்படி கட்சியைக் கண்டித்து விட்டார்.

கூவது சிவன் திரிபுரவிஜயம் செய்தார்.

முதலாவது—திரிபுராதிகளாகிய காலாடன், தாருகாடன், வித்துவின்மாலி, என்று மூன்றுபேர் பிரம்மாவின் வரத்தினாலும், வேதத்தினிடத்தில் பிராமண்ய புத்தியாலும், அவர்களுடைய ஸ்த்ரீகளின்கற்பின் பலத்தினாலும், இராக்ஷஸவிசுவகர்மாவான மயனால் சிருஷ்டித்த சஞ்சீவி சித்தரஸகூபமென்கிற அமிர்தக்கிணற்றினாலும், பிரபலராய் தேவர்களையும் பூலோகத்தாரையும் ஆகாசத்தில் திரியும்படியானமூன்று பட்டணங்களினாலே நாசஞ்செய்து கொண்டு வருகையில், அதினாலே இந்திராதி தேவதைகளெல்லோரும் போய்ச் சிவனிடத்தில் முறையிட்டார்கள்.

இரண்டாவது—அப்போது சிவன் தனக்குப் பசுபதியென்ற பேர்கொடுத்தால், நாம்திரிபுரஸம்ஹாரஞ் செய்கின்ளேமென்று வரங்கேட்டார். தேவர்களப்படியே வரங்கொடுத்தார்கள். பிறகு தேவகூட்டத்தைக்கூட்டிக்கொண்டு திரிபுரத்தின்பேரிலே தண்டெடுத்துப்போய் பெரியயுத்தஞ் செய்து, அநேகங்கோடி இராட்சஸர்களைக்கொல்ல, இறந்த இராக்ஷஸர்களை சித்த ரஸகூபமென்கிற கிணற்றில்தள்ள, அவர்கள் மறுபடியும் அறுத்த பயிர் முளைத்தாற்போல சீவித்து காலமே யுத்தத்துக்கு வந்துகொண்டிருந்தமையால், சிவன் அவர்களை ஜெயிக்க முடியாதவராய், ஸர்வாந்தர்யாமியாகிய ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து ஹோமஞ் செய்தார்.

ஆச்ரிதபாதந்தரரான ஸர்வேச்வரன் பிரத்யக்ஷமாகி உனக்கு வேண்டும்வரங் கேட்டுக்கொள்ளென்றான். சிவன் நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பஞ்செய்து, திரிபுர தானவர்களை ஜயிக்கும் உபாயம் தேடவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

மூன்றாவது—ஸர்வேச்வரன் பிரம்மாவைக் கன்றாகவரக்காட்டி; சித்தரஸகூபமென்கிற கிணற்றுக்குக்காவலாயிருந்த கிங்கரர்களை மயங்கச்செய்து, தாம் இறந்துபோகிற நிலைமையுடைய பசுவாய், கிணற்றி னருகேசென்று அதிற் பிரவேசித்து அமிர்தத்தையெல்லாம் நாவினால் கிரகித்தும், பௌத்தசாஸ்திரமென்கிற ஒரு பொய் நூலைக்கற்பித்து, தானொரு பௌத்ததேவதையாய், தானவரிடத்திற் சென்று வேதத்தில் பிரதிபத்தி இல்லாமலிருக்கும்படி போதித்தும், அவர்களுடைய ஸ்த்ரீகளிடத்தில்சென்று புத்திரன் வேண்டியிருக்குமவர்கள் அசுவத்தவிருக்ஷத்தைப் பூஜித்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டால் புத்திரர்

களுண்டாவர்களென்று போதித்தும், அவர்கள் ஆலிங்கனம்பண்ணிக்கொள்ளும் வேளையில் விருக்ஷரூபமாய் இருந்து தான் மாயாபுருஷனைப் அவர்களுடைய கற்பை யழித்தும், இவ்விதங்களாக திரிபுரதானவர்களினுடைய பராக்கிரமங்களை விஷ்ணுவானவர் அந்தரியாமியாயிருந்து, ஒருவராலுஞ் ்லிப்பிக்க அரிவாயிருக்கின்றமஹாமேருவை வில்லாக்கி சிவனை பரிக்கும்படிச்செய்தும், அஸ்திரத்தின் நுனியில் தாமிருந்து ஸம்ஹரித்தும், ஹரிபஞ்சரமென்கிற மந்திரத்தைநங் சிவனுக்கு உபதேசஞ்செய்தும், திரிபுரதானவர்களை சிவன் ஜயிக்கும் படிசெய்தான். இதற்குப்பிரமாணம்.

நான்காவது—பாரதம்-கர்ணபருவத்தில்.

விஷ்ணுராத்மாபகவதஃ
பவஸ்யாமிததேஜஸஃ
தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம்
ஸவிஷேஹேமஹேஸ்வரஃ

என்றதில்-அமிதமான தேஜஸ்ஸோடு கூடின பவனென்னும் பேருடைய சிவனுக்கு விஷ்ணுவானவர் அந்தராத்மாவாயிருந்த காரணத்தினலே பஹம்மேருவாகி வில்லினுடைய நாணின்யை சிவனிழுத்தியுத்தஞ்செய்தாரென்று சொல்லியிருக்கின்றது.

பௌத்த தேவதையா யவதரித்தது விஷ்ணுவின் தசாவதாரத்தில்காண்க.

ஐந்தாவது—ஆகில், அந்த திரிபுரயுத்தத்தில் விஷ்ணுவானவர் ருஷபமாய்த் தாங்கினதற்குக் கருத்தென்னவெனில், பூமியினுடைய சத்தை யெடுத்து அச்சாய்ச்திரட்டி, தேவர்களால் நிர்மிக்கப் பட்டிருக்கின்ற இரதத்தை-பூமி

யானது தரிப்பதற்குச் சக்தியில்லாமலிடிந்து பாதாளலோகத்தில் விழுந்தது. அங்கே கபிலருஷியாயவதரித்திருந்ததாம் சிவனை இரட்சிக்கிறோமென்றுவரங்கொடுத்த காரணத்தினாலே ருஷபமாய் வடிவெடுத்து அந்த இரத்தத்தை தாங்கினார்.

ஆறாவது—அத்தாலே சிவனுக்குப் பரத்வஞ்சொல்ல நினைக்குமளவில், மஹாவராஹமாய் அவதரித்து, இந்தப் பூமியையெல்லாம் சுமக்கிறதாய் புராணங்களில் சொல்லியிருக்கையால் பூமியிலுள்ளவர்களுக்கெல்லாம் பரத்வஞ் சொல்லவேண்டி வரும் ஆபத்தில் இரட்சிப்பது-ஸர்வேஸ்வரனுக்குக் கடமையாகையால், அத்தால் சிவனுக்குப் பரத்வஞ் சொல்லக்கூடாது.

ஏழாவது—விஷ்ணு ருஷபமாய்த்தாங்கின காரணத்தாலே, சிவனுக்கு ருஷபவாஹநம் உண்டாச்சுதென்னில் விஷ்ணுவுக்கு வாஹனம் கருடனும் இந்திரனுக்கு ஐராவதமும் இமயனுக்கு எருமைக்கடாவும் வாஹனமாயிருக்கின்றதுபோல், சிவனுக்கும் ருஷபவாஹனம் எப்போதுமுண்டாயிருக்கையால், இந்த ஹேதுவினா லுண்டாயிற்றென்று சொல்லக்கூடாதென்று கண்டித்துவிட்டார்.

சிவன் விஷ்ணுவுக்கு வாஹனமா யிருக்கிறகட்சி ஸ்ரீ ராமாயணத்தில் சிவன் அநுமானாயவதரித்தானென்றதில் கண்டுகொள்வது.

௪௦ வது - தக்கன் யாகத்தைச் சிவன் அழித்தான்

முதலாவது—தட்சப்ரஜாபதியானவர் விஷ்ணுவைக் குறித்து யாகஞ்செய்தபடியால், அப்போது விஷ்ணுவான

வர் அங்கே எழுந்தருளவேயில்லை. மற்ற இந்திராதி தேவர்களை வைத்துக்கொண்டு யாகஞ்செய்கையில், சிவன் தன்னை வரவழையாமல் யாகம்செய்ததைக்குறித்து வீரபத்திரனைச் சிருஷ்டித்து, யாகத்துக்கு வந்தவர்களை யழிக்கும்படி உத்தரவுசெய்தார்.

இரண்டாவது—அந்தப் பிரகாரமாக வீரபத்திரனும் தேவர்களைச் சின்னபின்னஞ்செய்து தக்ஷப் பிரஜாபதியை ஹிம்ஸித்ததின்பேரில், தக்ஷப்பிரஜாபதியுஞ் சிவன் தாமசனுகையால் அவனுக்கு யாகத்தில் யாகபாகமில்லாமல் போகக் கடவதென்றும், ஸ்மசானத்தில் வசிக்கக்கடவனென்றும், பேய்களுக்கும் பூதங்களுக்கும் நாதனுகக்கடவனென்றும் சபித்தார்; அதற்குப்பிரதிபாய் நந்தியானவன் பிராம்மணர்கள் அர்த்தகாம பராளாய்ப்போகக்கடவர்களென்றும், பின்னும், அநேகவிதங்களாகச் சபித்தான்.

மூன்ருவது—இவ்விதங்களாக யாகமழிந்தபின்பு, பிரம்மா இந்திராதி தேவர்கள் யாகத்தினிடத்தில்வந்து தக்ஷப் பிரஜாபதியை யெழுப்பி, அவரால் கொடுக்கப்பட்ட சாபத்தை அவரால்பிரதிஹ ஞ்செய்து சிவனுக்கு யாகத்தில் சேஷங் கொடுக்கும்படியாகவும் சிவனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுத்தபின்பு - புனஸ்நானம்பண்ணி மற்ற திக்பாலகர்களுக்கு ஹவிர்ப்பாகங் கொடுக்கும்படி நிச்சயித்து, தக்ஷப் பிரஜாபதியைக் கொண்டு யாகம் நிறைவேற்றிவைத்து, பூர்ணுஹுதிவேளையில் விஷ்ணுவானவர் எழுந்தருளி தக்ஷன் கோரின பலத்தைப் பிரஸாதித்து எழுந்தருளினதாய் ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கையால், விஷ்ணுவந்ததாயும் வீரபத்திரனுல் அபஜயப்பட்டதாயும்சொல்வது வேதவிருத்தமென்று ரத்தாக்கினுர்.

நான்காவது—எப்படியெனில், சுருதியில் (யஸ்யப்ர ஹ்மச க்ஷத்ரம்சோபேபவதஓதனம்) என்றதில்-கற்பாந்தத்தில் பிரம்ம ருத்திரர்களை அன்னமாய் புஜிக்கிருனென்றும், சுருதியில் (ம்ருத்யுர்யஸ்யோபஸேசனம்.) என்றதில்-பிரளய காலருத்திரன் பிரம்மாவாகிய அன்னத்துக்கு உபஸேசன மென்கிறகறிபதார்த்த ஸ்தானமாகிருனென்றும் சொன்னதை, வியாசர்வேதத்தின் ஆதியிலும்-அந்தத்திலும்-உச்சரிக்கின்ற ஹரி:ஓம் என்றபதத்தில், ஹரி: என்றபதத்துக்கு ஸஹஸ்ரநாம வியாக்கியானத்தில்.

ப்ரஹ்மாணமிந்த்ரம்ருத்ரஞ்ச
யமமவருணமேவச
நிச்ருஹ்யஹராதேயஸ்மாத்
தஸ்மாத்ஹரிரிஹோச்யதே.

என்றதில்-பிரம்ம ருத்திரேந்திராதி தேவர்களைக் கற்பாந்தத்தில் விஷ்ணுவானவர் ஹரிக்கிற காரணத்தினலே அவருக்கு ஹரியென்கிற நாமதேய முண்டாயிற்றென்று-ஸஹஸ்ரநாம வியாக்கியானத்திலும் அருளிச்செய்திருக்கிருர்.

அந்த வியாக்கியானத்துக்கு பாஷியம் பண்ணின சங்கராசாரியரும் சங்கரபாஷியத்தில் அப்படியே சொல்லியிருக்கையால், சிவன்கதி இப்படியாகுமளவில், விஷ்ணுவானவர் அந்தயாகத்துக்கு அப்போது வந்திருந்தால், சிவனல் உண்டாக்கப்பட்ட வீரபத்திரனை ஸம்ஹரிக்க அவருக்கு அரிதோவென்று அந்தக்கட்சியைக் கண்டித்துவிட்டார்.

௧௧ வது சிவன் அருச்சுனனுக்கு பாசுபதங் கொடுத்தார்.

சிவன் அருச்சுனனுக்குப் பாசுபதங்கொடுத்ததாய்ச் சொல்லுகிற கக்ஷிக்கு உத்தரம்.

முதலாவது—அருச்சுனன் பாசுபத அஸ்திரத்துக்குக் கைலாசத்திற்குப்போய் மந்திரம்பெற வேண்டுமென்று கண்ணனுடனே விண்ணப்பஞ்செய்கையில், கண்ணன் அருச்சுனனைக் குறித்துக் கைலாசத்திற்குப்போய் எந்தெந்தப் புஷ்பங்களினாலே சிவனை அர்ச்சிப்பாயோ அந்தப் புஷ்பங்களினாலே என் திருவடிகளில் அர்ச்சிப்பையாகில், சிவன் உனக்குச் சொப்பனத்தில் பாசுபதமந்திரத்தை உபதேசிப்பானென்று அருளிச்செய்தபடியே, அருச்சுனன் கண்ணன் திருவடிகளில் அர்ச்சிக்க, அன்றிராத்திரி இவனுடைய சொப்பனத்தில் சிவன்வந்து கண்ணன் திருவடிகளிலர்ச்சித்த புஷ்பங்களைத் தமது சிரசு முதலிய அவயவங்களிற்காட்டிப் பாசுபத மந்திரத்தை உபதேசித்துப்போனார்.

இரண்டாவது—இதற்குப்பிரமாணம்-பாரதத்தில்

பார்த்தோபநீதம் மதுஸூதநஸ்ய
பாதாரவிந்தார்சித சித்திரபுஷ்பம்
ததர்சகங்காதர மௌளிமத்யே
பபூவவீர: ச்ருதநிச்சிதார்த்த:

என்றதில் பார்த்தனை அருச்சுனன் மதுசூதனனாகிய கண்ணனைக்கிட்டி அவன்பாதாரவிந்தங்களில் அர்ச்சித்த புஷ்பங்களைக் கங்காதரனாகிய சிவனுடைய சிரசிலேகண்டு, கிருஷ்ணனை, சுருதியில், (ப்ரஹ்மண்யோதேவகீபுத்ரோ - ப்ரஹ்மண்யோமதுஸூதந:) என்றதில் தேவகீபுத்திரனாகிய கண்ணன் பரம்பிரம்மமென்றும்,

மூன்றாவது—மற்றொரு சுருதியில் (அங்காநி அந்யாதேவதா:) என்றதில் எம்பெருமானுக்கு பிரம்மருத்திரேந்திராதிதேவர்கள் அவயவங்களா யிருப்பார்களென்றுசொல்லியிருக்கையால் இந்தக்கண்ணனே பரம்பிரம மென்றும், வீரனான அருச்சுனனானவன் பண்ணைப்பட்டிருக்கின்ற நிச்சயத்தோடுங் கூடினவனாய் தான் ஸத்தைபெற்றானென்றும் சொல்லி யிருக்கையால், சிவன் பாசுபதங்கொடுத்ததினாலே அவனுக்கொரு மாஹாத்மிய முண்டாக மாட்டாதென்று கண்டித்தார்.

கஉ-வது சிவன் சரபப்பக்ஷியாய்வந்து நரசிம்மனை ஜயித்தான்.

சிவன் சரபப்பட்சியாய்வந்து நரசிம்மனைக் கொன்றானென்பதற்கு உத்தரம்-8-வது கக்ஷியில் மார்க்கண்டேயனுக்குச் சிரஞ்சீவி பட்டங்கொடுத்தநாய்ச் சொல்லுங்கதையில் வரும் பிரமாணங்களால் கண்டுகொள்வது.

கங-வது மோஹினிவேஷந்தரித்தவிஷ்ணுவினிடத்தில் சிவன் புணர்ந்து சாஸ்தாவைப்பெற்றான்

முதலாவது—தேவர்களை இரட்சிக்க வேண்டுமென்கிற திருவுள்ளத்தாலே, அசுரராக்ஷஸர்களுக்கு அமிர்தங்கொடாமல் வஞ்சிக்கும்பொருட்டு மோஹினி வேஷந்தரித்து, தேவர்களுக்கு அமிர்தத்தைப்பகிர்ந்தபோது, சிவன் கைலாசத்தில் விஷத்தைப் பானம்பண்ணி மயக்கங்கொண்டிருந்த

கக-வது காசியில் விஷ்ணு பரனென்று பிரமாணஞ்செய்த வியாசருக்கு புஜம் ஸ்தம்பித்துப்போனது.

முதலாவது—வியாச பதமென்று கற்பங்கள்தோறும் (வ்யாஸபதீதிவ்யாஸ:) என்கிற வித்பத்தியின்பிரகாரம் வேதத்தினுடைய யதார்த்தத்தை ஸ்தாபிக்கவும், அதற்கு மாறுன அர்த்தங்களை நிராகரிக்கவும், ஒருவரை பகவான் நியமித்து, அவரிடத்திலே தம்முடைய அதிஷ்டானமென் கிற ஆவேசத்தையும், பண்ணியிருக்கிறது. அத்தாலே வேதத்தில் - உ-வது கக்ஷி - ந - தொடரில், கற்பங்கள் தோறும் பிரம்ம ருத்திரர்கள் விஷ்ணுவினிடத்திலுண்டா கிறார்களென்றும் நாராயணன் ஒருவனே முடிவிலிருக்கிறு னென்றும், இப்படி நாலுவேதங்களிலுஞ் சொல்லியிருக்கிற அர்த்தத்தை மஹோபநிஷத்தில் (நாராயணபரம்ப்ரஹ்ம-தத்வம்நாராயண பர:)என்றதில் நாராயணனே பரப்பிரம்ம மென்றும், சுருதிகளிலும் - உபநிஷத்திலும், சொன்ன அர்த்தத்தை, சிஷயபுத்திரர்களும் - மற்றும் உலகத்திலுள்ள பண்டிதபாமரஜநங்களும் தெளிவையடையும்படி காசியில் ஸ்நாநஞ்செய்துஊர்த்வபுண்டரம் - துளசிமாலை - ஈரவஸ்தி ரஞ்தரித்து, கங்கைக்கரையில் - ஆகாசவாணி - பூமிதேவி சாட்சியாய் நான் பிரமாணமாய்ச் சொல்லுகிறேனென்று வியாசர் பிரதிக்கினைபண்ணி

ஸத்யம்ஸத்யம் புனஸ்ஸத்யம்
உத்ருத்ய புஜமுச்யதே
வேதசாஸ்த்ராத் பரம்நாஸ்தி
நதைவம் கேசவாத்பரம்,

என்று உபநிஷத்தில் இரய்டித்து இரண்டுதரம் ஸத்தியம் பண்ணினதை, தான் மூன்றுதரமாகச் சத்தியம்

பண்ணி, கையையுயரவெடுத்துச் சொல்லியிருக்கிறார் - அஃதென்னவெனில்.

இரண்டாவது — வேதங்களுக்கு மிஞ்சினசாஸ்திரமில்லை, ஆகையாலே கேசவனுக்குமிஞ்சின தெய்வமில்லையென்று பிரமாணம் பண்ணிச்சொன்னபோது, நந்தியானவன் யதார்த்தத்தைச் சொல்லுகிறாரென்று, சாத்விகத்துடனே கூடியிராமல் தாமஸகுணத்தாலே வியாசரை ஹிம்சிக்கவந்தான். அப்போது சிவனுடைய அம்சபூதரான அநுமாரானவர் நந்தியைக்கோபித்து, தம்முடைய இடது திருவடியாலே அவனுடைய முகத்தின்பேரில் உதைக்க, அத்தாலே மேல்வாய்ப் பற்களெல்லாம் உதிர்ந்து போய் விட்டன.

மூன்றாவது—இது லோகத்தில் பிரசித்தியடையும் பொருட்டு விஷ்ணுபக்தர்களான தாசர்களை நோக்கி நீங்கள் கங்கை எருது என்கிற ஒரு எருது சம்பாதித்து, அதினுடைய நெற்றியிலேதாய் நந்தியை உதைத்ததற்கு திருஷ்டாந்தமாக தம்மை விக்கிரஹரூபமாய் பிரதிஷ்டைபண்ணும்படியாய் நியமித்து, அநுமார் எழுந்தருளிவிட்டார். இதற்குப்பிரமாணம் தேடவேண்டாமல் உலகத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணலாயிருக்கும்,

நான்காவது—சங்கராசாரியர்(தத்வவிவேகோ விஷ்ணு புராணஃ ப்ஜகோவிந்தம்) என்றசுலோகத்தில், வேதத்தினுடைய உண்மையை அறிய வேண்டியவர்கள் ஸ்ரீ விஷ்ணு புராணத்தாலே அறியக்கடவீர்கள் என்று சொன்னபடியே, ஷை புராணத்தில் ஸ்ரீ பாராசரபகவான்.

யதாஸர்வேஷு தேவேஷு
நாஸ்தி நாராயணாத் பரஃ

ததா ஸர்வேஷு மந்த்ரேஷு
நமந்த்ரோ ஷ்டாக்ஷராத்பரः.

என்றதில் எப்படி சமஸ்ததேவர்களுக்குள்ளே நாராயணனை விட பரனில்லையோ, அப்படியே சமஸ்தமந்திரங்களில் அஷ்டாக்ஷரிக்குமிஞ்சின மந்திரமில்லையென்று, பிரமாணம்பண்ணிச்சொன்னர்.

ஐந்தாவது—விஷ்ணுமாயையைக்கடந்த சுகயோகீந்திரர் தப்த சிம்மாஸநத்தில் ஏழுநாளிருந்து, பரிக்ஷிந்மஹாராஜனுக்கு தெளிந்தஞானம் உண்டாகும்படி தீர்க்க சத்திர யாகத்தில் பிருதுமஹாரிஷி திரிமூர்த்திகளுடைய குணங்களைப் பரிக்ஷித்து, ஷை ரிஷிகள்முன்பாக வேதத்தில் சொன்னபடியே பிரமாணம்பண்ணிச்சொன்னதாய்

ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி
விசார்யச புநःபுநः
இதமேகம் ஸுநிஷ்பந்நம்
த்யேயோ நாராயணஸ்ஸதா.

என்றதில் சமஸ்தவேதங்களையும் மறுபடியும் விசாரணைபண்ணிப் பார்க்குமளவில், சுருதியில் காரண வஸ்து எவனோ அவனே தியாநத்துக் குரியவனென்று சொன்னது நாராயணனேயென்று பிரமாணம் பண்ணினதாய் சுகர் பரிக்ஷித்துக்கருளிச்செய்தார்.

ஆருவது—சிவன் காசியில் உமைக்குப்பிரமாணம் பண்ணிச்சொன்னதாவது.

ஸ்ரீராம ராம ராமேதி
ஏதத் கார்யம் ஸமுச்யதே
அதஸ்தம் ஜாநகீநாதம்
பரப்ரஹ்ம விநிச்சிதம்.

வேதத்தில்சொன்ன அர்த்தத்தை பார்வதியே! இப்போது உனக்குச் சொல்லுகிறதாவது, ஜாநகீநாதன் பரப்பிரம்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றதெதுவோ, அதைத்தான் உனக்குபதேசிக்கிறேன் என்று சிவன் பிரமாணம் பண்ணிச்சொன்னார்,

ஏழாவது—போதாயனர் அறுபதினாயிரம் பெயர்களாகிய தம்முடைய சிஷ்யர்களுக்கும் மற்றும் உலகத்திலுள்ள பண்டித பாமரர்களுக்கும் தெளிந்த ஞானமுண்டாகத்தக்கதாய் வேதங்களில், தாம் விசாரித்து நிச்சயித்திருக்கிற அர்த்தத்தை, பிரமாணபூர்வகமாய்தெரிவிக்கிறார். அதாவது

எட்டாவது—போதாயநவிருத்தியில்

நாராயணஸமோநாந்ய:
ஸர்வலோகேஷு வித்யதே
தஸ்மாத்அப்யதிக: கச்சித்
க்வாபிநாஸ்திஹிகேசவாத்.

என்றதில் ஸ்ரீமந்நாராயணனுக்கு அதிகமானவர்களும் சமானமானவர்களு மில்லையென்று, சமஸ்த வேதங்களிலும் சொல்லப்பட்டவற்றை சமஸ்தலோகத்தாரும் அறிந்திருக்கிறார்கள். ஆகையினாலே கேசவனைவிட வேறே அதிகமானவர்கள் ஒருவருமில்லையென்றும்,

மநுஷ்யாணாம் பரோவிப்ர:
விப்ராணாம் பரமோயதி:
ப்ரஹ்மேசேந்த்ராதி தேவாநாம்
தேவோ நாராயண:பர:.

மனுஷ்யர்களில் சிறந்த பிராம்மணர்களைப்போலேயும், விப்பிரர்களுக்குள்ளே சிறந்த எதிகளைப்போலேயும், பிரம்ம

ருத்திரேந்திராதி தேவர்களில் ஸ்ரீமந்நாராயணன் பரனென்று அறியவேண்டியது.

விபுதேப்ய: பரச்சக்ர: சக்ராத்பரதரச்சிவ;
சிவாத்பரதரோப்ரஹ்மா ப்ரஹ்மாண பரமோஹரி:.

தேவர்களுக்குள்ளே இந்திரன் சிறந்தவன், அவனைவிட சிவன் சிறந்தவன், அவனைவிட பிரமன்சிறந்தவன், பிரமனைவிட விஷ்ணுவே பரனென்றும்,

விஷ்ணு:பரமஇத்யாத்யாருசோபஹ்வீதோஜகு:
நாராயண: பரமிதியஜுர்வேதேசபட்யதே;
வாஸுதேவ: பரஇதி ஸாமவேதேசகீயதே
நாராயண: பரப்பஸ்வான்மஹோபநிஷதிஸம்ஸ்ருத:.

விஷ்ணுவேபரனென்று ருக்வேதத்தில் பலவிடங்களிலும் சொல்லியிருக்கின்றது. நாராயணன் பரனென்று எசுர்வேதத்தில் படிக்கப்பட்டிருக்கின்றது வாசுதேவன் பரனென்று சாமவேதத்தில் கானம்பண்ணப்பட்டிருக்கின்றது நாராயணன் பரனென்றும் சத்தியமென்றும் மஹோபநிஷத்தில் இரட்டித்துச் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும் சத்தியம் பண்ணி யிருக்கிறார்.

ஒன்பதாவது—வியாசருக்கு-கை-ஸ்தம்பித்தது எதார்த்தமாகில், இப்போது விஷ்ணு பரனென்று சொன்ன சிவன் முதலானோர்களுக்கெல்லாம், கையும்-வாயும்-ஸ்தம்பித்துப் போகவேண்டுமல்லவா! ஆகையால், சைவர்கள் பொறாமையினாலே வேதங்களுக்கு விருத்தமாகச்சொன்ன கக்ஷி நிரசிக்கப்பட்டது.

௨௦-வது திரிபுரவிஜயத்திலே விஷ்ணு ரிஷபமாய்த் தாங்கினார்.

முதலாவது—௯-வது கக்ஷி-௩-வது தொடரில், விஷ்ணு சிவனுக்கு அந்தராத்மாவாயிருந்து மஹம்மோஹவை வில்லாகச் சிவன் பிடிக்கும்படிசெய்து எப்படி திரிபுரவிஜயம் செய்வித்தாரோ, அப்படியே ஷை கக்ஷி-௫-வது தொடரில் பூமியினுடையசத்தை யெடுத்து தேருக்கு அச்சாக்கினபடியால் அந்த ரதத்தை பூமிபரிக்க மாட்டாமல் பாதாளத்தில் இடிந்து விழுந்ததை, ரிஷபமாய்த்தாங்கி சிவனுக்கு திரிபுரவிஜயப்பண்ணும்படி, விஷ்ணுசெய்வித்த கதையைக் கண்டுகொள்க.

௨௧-வது பிரம்மாவினுடைய சிரசுகளைச் சிவன் மாலையாகத் தரித்தார்

முதலாவது.—கற்பங்கள் தோறும் பிரம்மாவினிடத்திலும், விஷ்ணுவினிடத்திலும் சிவன் பிறந்ததாய், ௨-வது கக்ஷி-௨, ௩-வது தொடரில் சொல்லியிருக்க, அப்படிப்பட்ட தன்பிதாவினுடைய சிரசைத் தான்கொய்து மாலையாகத் தரித்தானென்பது ஷை சுருதிகளுக்கெல்லாம் விரோதம்.

இரண்டாவது—விஷ்ணுவானவர் கற்பாந்தத்தில் பிரம்ம ருத்திரர்களை ஸம்ஹரித்தகாரணத்தினாலே விஷ்ணுவுக்கு ஹரியென்கிற திருநாமம் வேத ஆதியிலும் அந்தத்திலும் ஹரிః ஓம் என்று சொல்லப்பட்டிருக்கின்றதை, விஷ்ணுவின் ஸஹஸ்ரநாம வியாக்கியானமாய் வியாசரால் சொல்லப்பட்டதில்.

ப்ரஹ்மாண மிந்த்ரம் ருத்ரஞ்ச
யமம் வருணமேவச
நிக்ரஹ்ய ஹரதே யஸ்மாத்
தஸ்மாத்ஹரிரிஹோச்யதே.

என்றதில் பிரம்மா-இந்திரன்-ருத்திரன்-இயமன்-வருணன்-இவர்களை விஷ்ணுவானவர் நிக்கிரஹித்து ஹரித்தகாரணத்தினாலே, ஹரி: என்ற திருநாமம் உண்டாயிற்றென்று சொன்னதற்கு ஸஹஸ்ரநாம பாஷியத்தில், சங்கராசாரியர்-இராமாநுஜாசாரியார்-மத்வாசாரியர் இவர்கள் செய்த பாஷியங்களும், இப்படியே வியாக்கியாநனஞ் செய்திருக்கிறது மல்லாமல், சிவன் பிரம்மாவினுடைய சிரசை அறுத்து அவன் இறந்தது மெய்யேயாகில், சுருதியில் கற்பாந்தத்தில் (நப்ரஹ்மா நேசாநः) என்று பிரம்மாவும்-ஈசாநனும், இரண்டுபேரும் ஏககாலத்திலே விஷ்ணுவினால் இறந்ததாகச்சொல்லியிருக்கிற ஸ்ருதிகளுக்கும் விரோதமாயிருக்கிறபடியால், சைவர்கள் சொல்வது அசத்தியம்.

மூன்றாவது—தன்பிதாவாகிய பிரம்மாவினுடைய ஒரு சிரசைக் கொய்ததற்கு வந்த பிரம்மஹத்தி தொலையும்படி காசியில் சிவனுக்கு-௩-வது கக்ஷி ௨-வது தொடரில், இராமதாரகமந்திரத்தை உபதேசித்ததாய் சுருதியில் இராமோபநிஷத்திலும் பாத்மோத்தரத்திலும் பாகவதாதி புராணங்களிலும் சொல்லியிருக்கிறபடியே, கபாலியென்கிற பெயருடனேகூடிக் கபாலமோக்ஷமென்று அந்தக்கபாலத்தை விஷ்ணு போக்கினதாயுஞ் சொல்லியிருக்கையால், சைவர்கள் சொல்வதெல்லாம் அபத்தமென்றறியலாம்.

உஉ-வது சிவன் ஞான மோக்ஷங்களைக் கொடுக்கிறான்.

முதலாவது—சிவன் தனக்கு ஞானம்உண்டாகிலன்றோ தன்னை யடைந்தவர்களுக்குத் தான் ஞானப்பிரதானம் பண்ணுவது (ஸத்யம் ஜ்ஞாநம் தபோ மௌநம்.) என்கிற சுலோகத்தில் சொன்னபடியே சத்தியமும்• ஞாநமும்-தபசும்,மௌநமு முதலான-குணங்கள்-சாத்வீகத்தின் காரியமாகையால், உ-வது-சக்ஷி-முதலாவதுதொடரில் சுருதி. (விஷ்ணுஸ்ஸாத்வகுணப்ரணீதோபவத்) என்று விஷ்ணுவை சாத்விககுணமுடையவனென்றும் (தஸ்யநாபேரஜோத்மா ஸ்வயம்பூ:) என்றதில் பிரம்மாவை ராஜஸகுணமுடையவனென்றும் (ததாதஸ்யப்ருவோரந்தராளாத் தமோருத்ரஃ ப்ராதுரபவத்). என்று சிவனைத் தாமசனாகவும்.

ஸர்க்கரதி என்ற சுருதியில் சொல்லியிருக்க, ஸாத்வீகத்தின் செய்கையான ஞானம் சிவனுக் கெங்கேயிருந்துண்டாயிற்று, தனக்கில்லாத ஞானத்தை தன்னையடுத்தவர்களுக்கு எப்படி கொடுப்பார்.

இரண்டாவது——சிவனானவர் ஞானமுடையவராகில் தன்பிதாவாகிய பிரம்மவினுடைய சிரசைக் கொய்து அத்தால் பிரம்மஹத்தி உண்டாகிப் பாதகனாய்த்திரிவாரா, அவரிடத்தில் குற்றங்கண்டு கொய்தாரெனில்: விஷ்ணுவினுடைய மோஹினிவேஷத்தைத் தான் மறுபடியும் பார்க்க வேண்டுமென்று அபேட்சித்து விஷ்ணுவானவர் - தன் மாயையினாலே ஒரு ஸ்த்ரீயைக்கற்பிக்க அவளைக்கண்டு பிரமித்துக் கானலை நீரென்றெண்ணி ஓடும் மான்களைபோல் ஓடுகிற அந்தஸ்த்ரீயைப் பின்சென்று அத்தால்இந்திரியம்

தொடை வழியேபெருகி அதில் ஜாஸ்த்ரமென்கிற க்ஷாத்ர தேவதை பிறந்ததாய் ஆக்நேயபுராணங்களில் சொல்லியிருக்கையால் புருஷ வேஷத்தைக்கண்டு பிரமிக்கை ஞானத்தின்காரியந்தானே.

மூன்றாவது—இதுவுமன்றியில், பாத்மபுராணம்-உத்தரபாகம்; மாகமாஹாத்மியம்-௨௦-ம் அத்தியாயத்தில்,

ப்ரக்ருதம்ப்ருஹ்ம ராஜேந்த்ர கபாலம்பாணிநா ததத்
லோகே கபாலீபிக்ஷார்த்தீ பிக்ஷாமடதி சங்கர:.

சிவன் தனது கையில் தலையோட்டைப்பிடித்துக்கொண்டு பூமியில் பிச்சைக்காரனைப்போல் பிச்சைக்காகத் திரிந்தானென்றும்.

அடந்பிக்ஷாம்கதாசித்ஸ: ப்ராபதாருவநம்மஹத்
ஸர்வலோகமநோஹாரி ரூபலாவண்யஸேவதி:

அப்படித்திரிகிற அந்தச்சிவன் ஒரு நாள் மிகுந்த அழகுள்ள ரூபமுடையவனாய்த் தாருகாவனத்தில பிச்சையெடுக்கப்போய்ச் சேர்ந்தானென்றும்,

ரூபேணமோஹயாமாஸ ருஷிபத்நீஸஹஸ்ரச:
வீதீஷுஸஞ்சரந்சம்பு: மஹாநதிகரூபவாந்.

அந்தச்சிவன் தாருகாவனத்தின் வீதிகளில் திரிந்து ருஷிகளுடைய பத்தினிகளைக் கும்புகும்பாய் மோஹிக்கும்படி செய்தானென்றும்,

தம்த்ருஷ்ட்வாமுநயஸ்ஸர்வே பத்நீஸ்ஸாமதநாதுரா:
ஸம்மோஹயித்வாந: பதநீரஸாகச்சதிசங்கர:.

ரிஷிகளெல்லாஞ் சிவனைப்பார்த்து மோஹித்த தமது பத்தினிகளைப்பார்த்து, இந்தச்சிவன் நமது பத்தினிகளை

மோஹிக்கும்படி செய்து திரிகிறாரென்று சொல்லிக்கொண்டார்களென்றும்,

> இத்யுக்த்வாமுநயஸ்ஸர்வே க்ரோதவேகவசாநுகா:
> சேபுஸ்தேபரமேசாநம் ஸமேத்யயுகபந்ருப:.

பிறகு அந்த ரிஷிகளெல்லாம் மிகவும் கோபித்துக்கொண்டு ஒன்றாய்ச்சேர்ந்து, சிவனுக்குச் சாபங்கொடுத்தார்களென்றும்,

> சித்வாலிங்கம்பதத்வஸ்ய பூமௌநவ்ருஷணம்ஹடாத்
> ஸப்தஸ்யைவப்பசுபதே: ப்ராஹ்ண ரபவத்ததா.

தனது லிங்கம் பூமியின்பேரி லறுந்துவிழும்படி ருஷிகளால் சாபமடைந்த அந்தச்சிவனுக்கு அப்படியே சம்பவித்ததென்றும் சொல்லியிருக்கின்றது

நான்காவது---ஞானசூனியரான இந்திராதிதேவர்கள் துரோணாசாரியின் தேவிகளின்நிதம்பப்பிரதேசம் அழகாயிருக்குமென்பதைத் தாம் கேட்டு அதிதியாய்வர அமுது படைத்தவளின் யோனியைக்கண்டு பிரமித்து இந்திரிய ஸ்கலிதராய், அசுவத்தாமாவாக பிறந்தகதை பாரதத்தில் சொல்லியிருக்கையால் இதுஞானத்தின் செய்கைதானே, ஸ்ருதியில் தாஸனென்று சொல்லியிருக்கையால் தாமஸ குணத்தில் ஸாத்வீகமுண்டாகவேமாட்டாது.

ஐந்தாவது— இரணிய-இரணியகசிபு-இராவண-கும்பகர்ணாதிகளுக்குக்கொடுத்த வரங்களை விஷ்ணு அழித்துவிட்டபடியால், கண்டாகர்ணனென்ற அசுரன் சிவனிடத்தில் காமியத்தை யபேட்சிப்பதில் பிரயோஜன மில்லையென்றுதெளிந்து, அண்டத்துக்குப் புறம்பாய் அழியாத பதவியாகிய மோட்சவீட்டையே எனக்குப் பிரஸாதிக்க வேண்

டுமென்று பிரார்த்திக்க அதற்கதிகாரிநாமன்று-விஷ்ணுவே கடவுளென்று சொல்லிவிட்டபின்பு கண்டகர்ணன் கிருஷ்ணனைக்கண்டு பிரவிருந்திட்டு கிருஷ்ணனை யுகப்பித்துத் தானுந் தன்தம்பியும் பரமபதத்துக்குப் போனகதை பாரதத்தைச்சார்ந்த ஹரிவம்சத்தில் சொல்லியிருக்கையால் சிவனுக்கு ஞானமுங்கிடையாது மோக்ஷவீட்டைக் கொடுப்பதற்கு அதிகாரமுங்கிடையாதென்பது மிகவும் நிச்சிதமென்று கண்டித்துவிட்டார்.

உரு-வது லிங்கத்தை விஷ்ணு யோனியாய் தாங்கினர்

முதலாவது—பிருகுமஹாரிஷிசாபத்தினலே சிவனுக்கும் உமைக்கும் லிங்கங்களறுந்துவிழுந்து, காட்டிலே சஞ்சரித்துக்கொண்டிருந்த பின்பு விஷ்ணுவைக்குறித்து ஆயிரஞ் செண்பக புஷ்பங்களினலே அர்ச்சிக்கையில் ஒன்று குறைந்ததென்று தன் மூக்கையரிந்து அர்ச்சிக்க, அப்படிப்பட்டபக்தியை விஷ்ணுவானவர்கண்டு ப்ரீதியடைந்து, இருவருக்கும் லிங்கம் உண்டாகத்தக்கதாயும் பரஸ்பரம் போகித்து ப்ரீதியடையத்தக்கதாயும், அநுக்ரஹித்தகதை,ருத்திரகீதை அகஸ்திய சம்மிதையில் சொல்லியிருக்கின்றதை கூ-வது கட்சி-க-வது தொடரில் பிரமாணஞ்சொல்லி யிருக்கையால் விஷ்ணு யோனியாத்தாங்கினரென்பது சர்வாபத்தம்.

உ௪ வது சங்கர நாராயணரூபத்தில் விஷ்ணு பாதிரூபமாயிருந்தாரென்பது

முதலாவது—ஒருவிஷ்ணுபக்தரானவர்மேற்கேயிருந்து ஸ்ரீரங்கயாத்திரையாய் எழுந்தருளுகையில், காலந்தப்பிப் பசியுடனே மூர்ச்சைகொண்டு ஒரு ஆலயத்தைகண்டு அதில் தளிகைபண்ணிப் பெருமாளுக்கு அமுது செய்விக்கலாமென்ற கருத்தாலே, அது சிவாலயமென்று தெரியாமல் கிட்டிவருகையில், அப்பாலே போவதற்கு சக்தியில்லாமல் விசனத்துடனே கடந்துபோகையில்,

இரண்டாவது—கூ - வது கட்சி, ௪ - வது தொடரில் அதர்வசிரசில் (ஸோந்தராதந்தரம் ப்ராவிதத்:)

என்றதில் அந்த ஸ்ரீமந்நாராயணன் என்னுள் அந்தராத்மாவாயிருக்கிறானென்றும், அத்தாலே நான் லோகாதிபதியாயிருக்கிறேனென்றும் சிவன் சொன்னதற்குத் தகுதியாய், மற்றொருசுருதியில் (அங்காந்யந்யா தேவதா:)

என்றதில் பிரம்மருத்திராதிகள் - விஷ்ணுவைக் கசரண அவயவபூதராயிருப்பரென்று சொல்லியிருக்கையாலும், அவ்வர்த்தத்தைப் பாரதம் கர்னபருவத்திலும் பாத்மோத்தரத்திலும் விஷ்ணு சிவனுக் கந்தரியாமியென்று சொல்லியிருக்கையாலும், புருஷசூக்தத்தில் (அந்தர்ப்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்யநாராயணஸ்தித:) என்று

ஸ்ரீமந்நாராயணன் ஸமஸ்த ஆத்மாக்களிலும் - அந்தரியாமியா யெழுந்தருளியிருக்கிறாரென்றும் சொல்லியிருக்கையாலும், அந்தச்சிவனுடைய ஹிருதயத்தில் அந்தரியாமியாகிய ஈச்வரன் தன்னுடைய பக்தன் பட்டினியாய்போகிறாரென்று அவரிடத்தில் இரக்கமுற்று, ஒரு வைஷ்ணவரைப்போல் உருவங்கொண்டு பட்டினியுடனே சென்ற

பாகவதரைக்கிட்டி, நீரேன் பட்டினியுடனே போகிறீரெ ன்றுகேட்க, தளிகை பண்ணிக்கொள்ள இடமில்லையென்று சொல்ல, ஆகில் முன்கடந்த ஆலயத்தில் பண்ணிக்கொள் ளக் கூடாதோவென்ன, அதுசிவாலயமாயிற்றே என்ன, அன்று அது விஷ்ணுவாலயங்காணென்ன, ஆகில் வருகி றோமென்று, உள்ளே பிரவேசிக்கையில் அங்கங்களாய்ச் சொன்ன சுருதியின் பிரகாரம் சிவனுக்கு அந்தரியாமியா யிருந்த தான் சதுர்புஜசங்கசக்ரகிரீட மகரகுண்டல லக்ஷ்மீ சின்னத்துடன் சேவைசாதிக்க, பின்பவர் அவ்வாலயத்தில் தளிகைபண்ணி தமது திருவாராதனத்துக்குக் கண்டருள ப்பண்ணி அமுது செய்தாரென்றது லோகப்பிரசித்தியா கையால், அதனாலே சிவனுக்கொரு மஹாத்மியங் கற்பிக்கக் கூடாதென்று ஸ்தாபித்தார்.

உரு-வது. அந்த சங்கரநாராயணரூபத்திலே சிவன் பிரதாசமானுரென்பது,

முதலாவது—ஸ்ருதிமரியாதை யறியாத சைவர்கள், சொல்வதெப்படியிருக்கிறதென்னில், பூமியின்பேரில் செடி கொடிமுதலான ஒஷதிகள் ஜனிக்கிறதாய், உ-வது கட்சி க-வது தொடரில் சுருதிசொல்லியிருக்க, செடிகொடிமுத லான ஒஷதிகளின்பேரில் பூமிநிற்கிறதாய்ச் சொல்வதுபோ லிருக்கின்றது.

இரண்டாவது—இதற்குப்பிரமாணம் ஷ தொடரில் சொல்லுகிற சுருதிகளில், கற்பங்கள்தோறும் விஷ்ணுவிட த்தில் பிறம்மருத்திரேந்திராதிதேவர்கள் ஜனித்ததாயும், மற்றொரு கற்பத்தில் விஷ்ணுவின் முகத்திலிருந்து பிறந்த வேர்வைத்துளியில் ஒரு நீர்க்குமிழியுண்டாகி, அக்குமிழி

யில் நின்றும் மூன்றுகண்களையுடைய சூலபாணிபிறந்தானென்றும் சொல்லியிருக்க, இதற்கு முன்கட்சியில்சங்கரனுடைய ஹிருதயத்தில் அந்தராத்மாவா யெழுந்தருளியிருந்த நாராயணன் ஒரு பாகவதன் பட்டினியாய்ப் போவதைக்குறித்துப் பிரகாசமானதாய்ச் சொல்லியிருக்க, அந்தநாராயணனுடையஹிருதயத்திலிருந்து சிவன் பிரகாசித்தானென்று சொல்வது சுருதிகளுக்கு விரோதம்.

மூன்றாவது—சிவனுடைய ஹிருதயத்தில் விஷ்ணு அந்தராத்மாவா யெழுந்தருளியிருக்கின்ற பிரகாரத்தை, அதர்வசிகையென்ற ஸ்ருதியில் சிவன் சொல்லியிருப்பதினாலும், அவ்வர்த்தத்தை பாரதம் கர்ணபர்வத்திலும், பாத்மோத்தரத்திலும், உரைத்திருப்பதினாலுங் கண்டுகொள்க.

ஆக இந்தப் பிரகாரமாக முதல்கட்சி தொடங்கிக் கடைசிகட்சிவரையில் உதாஹரித்த ஸ்ருதிகளையும், அதற்கு வியாக்கியானங்களாகியஇதிஹாசபுராணங்களையும்,கூரத்தாழ்வான் உபந்யசித்து, சைவசித்தாந்திகள் சொல்லும் கட்சிகளைக்கண்டித்து, எம்பெருமானர் தரிசனத்தை ஸ்தாபித்தார்.

ஷை வித்வாம்சர்கள் இவர்வெகுவேதங்களைப்படித்தவராகையால்,இவரை எங்களால் ஜயிக்கமுடியாதென்று தெரிவித்தார்கள். ஆகில் நான் அவரிடத்தில் கையெழுத்து வாங்குகிறேனென்று சோழன் கூரத்தாழ்வானை வரவழைத்துக் கையெழுத்து வைக்கச்சொன்னான். வித்வான்களுடனே பிரசங்கம் பண்ணும்படியாய்ச் சொன்னீர், அந்தப் பிரகாரமாய் நான் பிரசங்கஞ்செய்து விஷ்ணுதரிசனத்தை ஸ்தாபித்தபடியால் நீரும் காரணவஸ்து எதுவோ அந்த வஸ்துவைப் பிரதிபாதிக்கும் சித்தாந்தத்தில் பிரவேசிக்க வேண்டியது கிரமமாயிருக்க நீர் மூடத்தன்மையினாலே

என்னைக்கையெழுத்து வைக்கச் சொல்லுகிறீரல்லவா? அப்படியே கையெழுத்து வைக்கிறேனென்று, சிவமென்று குறுணிக்கும் மங்களத்துக்கும் சிவனுக்கும் பேராகையால் இவ்விடத்தில் குறுணியென்று அர்த்தம்பண்ணி (துரோணமஸ்திததஃ பரம்) என்று குருணிக்குமேலே பதக்கிருக்கிறதென்று அர்த்தம்பண்ணிக் கையெழுத்து வைத்தார்.

அதை வித்வாம்சர்களால் தெரிந்து கோபித்துக்கொண்டு கண்ணைப்பிடுங்கும்படி உத்திரவு செய்தான். அப்போது ஆழ்வான் தாமே தமது கரத்தாலே தன் கண்ணைப்பிடுங்கி அவன் கழுத்திலெறிந்தார். அது நாற்றெட்டு கண்களையுடைய கண்டமாலையாகி அதில் புழுக்கள் தள்ளி அத்தால் க்ரிமிகண்ட சோழனென்ற பேரையும் வஹித்தான்.

பெரிய நம்பியை வரவழைத்து முன் சொன்னபடி கையெழுத்துவைக்கச்சொன்னான், பெரியநம்பிகள் விஷ்ணுபரனென்று கூரத்தாழ்வான் அநேகசுருதி இதிஹாசபுராணங்களாலே ஸ்தாபித்துச் சைவமதத்தைக்கண்டித்திருக்க மறுபடியும் நீர் என்னைக் கையெழுத்து வைக்கச்சொல்வது இராஜநீதியன்று, மேலும் ஒருவன் உலகத்தையெல்லாம் தமது திருவடியாலே அளந்தான். அளந்தபோது, அந்தத் திருவடிகள் அண்டசுவரிற்பட்டுப் பிளந்து, அதில் நின்றும் கங்கை பிரவஹித்தது. அந்தகங்கையை ஒருவன் தன்னுடைய கைகளிலிருக்கின்ற கமண்டலத்தாலே க்ரஹித்து, அந்ததீர்த்தத்தைத்தன் புத்திரன் தலையில்ஸ்தாபித்தான்.

இவர்களில் உலகத்தை அளந்தவன் பெரியவனா, கமண்டலத்தில் தாங்கினவன், பெரியவனா, அத்தீர்த்தத்தைச் சிரசில் தரித்துக்கொண்டிருக்கிறவன் பெரியவனா, ஓய் இராசனே, இந்த நிச்சயத்தைச் சொல்லவேண்டுமென்றுகேட்க

அவன் கோபிஷ்டனாய் இவரையும் நேத்திரத்தைப்பிடுங்கி விடும்படி உத்தரவுசெய்தான்.

இச்சங்கதிகளை ஸ்ரீபாஷ்யகாரர் மேல்நாட்டில் எழுந்தருளியிருக்கிறவர் கேள்விப்பட்டு, மிகுந்த வியாகுலத்துடனே க்ஷிக்ரிமிகண்ட சோழனை யமலோகத்திற்கனுப்ப வேண்டுமென்று திருவுள்ளத்தில்கருதி, சுருதியில் (ஸ்யேநே நாபிசரந் யஜேதா.) என்று சொல்லியிருக்கின்ற பிரகாரம் சேனைவிதியென்கிற மரணஹோமத்தைப்பண்ணி, அங்கிருந்தே க்ஷி க்ரிமிகண்ட சோழனுடைய உயிரை வாங்கி விட்டார்.

பின்பு உடையவர் திருநாராயணபுரத்திலே, யாதவசைலபூமனைப் ப்ரதிஷ்டைசெய்து, பின்பு தம்முடனே வாதித்த ஜயினர்களாயிரம்பேரையும், ஆதிசேஷாவதாரமெடுத்து, ஆயிரம் வாய்களினாலே ஒவ்வொருவன்சொன்ன ஆயிரங் கட்சிகளையுங் கண்டித்து, அதற்குமேல் ஒவ்வொருவனுக்கும் ஆயிரங் கட்சிகளேற்றித் - தோற்றவர்களைப் பிடித்து, கற்காணங்களாகிற செக்கில் - ஜயினியர்களென்கிற எள்ளுகளையிட்டு ஆட்டிவிட்டு, அத்தனைபேரையும் த்வம்ஸம்பண்ணி; அங்கிருந்து - டில்லிக்கெழுந்தருளிச் செல்வப்பிள்ளைராயரை ஸ்வாதீனஞ்செய்து, திருநாராயணபுரத்தில் பிரதிஷ்டைசெய்து; அங்குநின்றும் திருமலைக்கெழுந்தருளி; சைவர்களாலே ஆக்ரமிக்கப்பட்ட திருவேங்கட முடையானுக்கு, தம்முடைய நிஜஸ்வரூபமாகிய ஆதிசேஷ ரூபத்தைக் காட்டி சங்கு சக்கரங்களைத் தரிப்பித்து திருவேங்கடமுடையானைத் திரு ப்ரதிஷ்டைசெய்து; இறந்தசோழன் நாளையில் தில்லையில் எழுந்தருளி யிருந்த கோவிந்தராஜர் திருமலையடிவாரத்தி லெழுந்தருளி யிருந்தவருக்கு விமான கோபுர ப்ராகார மண்டபங்கள் திரு ப்ரதிஷ்டை

செய்வித்து; பின்பு வேதத்துக்கு வியாக்கியானமாக வியாசரருளிச்செய்த, பிரமசூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத சித்தாந்த ரீதியாய் ஸ்ரீ பாஷியஞ்செய்து; காசியில் சரஸ்வதி பீடத்துக்கெழுந்தருளி, அவளால் பண்ணப்பட்ட ப்ரஶ்னமாகிய (தஸ்யயதா கப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ.) என்ற ஸ்ருதிக்கு சூரியனாலே விகாசப்பண்ணப்பட்ட தாமரக்கபலம்போன்ற கண்களையுடையவன் விஷ்ணுவென்று உபந்யசித்து, அவளையுகப்பித்து, அவளால் ஸ்ரீ பாஷ்யகாரரென்கிற பட்டப்பெயரும்பெற்று; அங்குநின்றும் ஸ்ரீரங்கத்துக்கெழுந்தருளி விஷ்ணுதரிசனமே சித்தாந்தமென்று ஜயஸ்தம்பம் நாட்டி; அந்த சங்கதியை ஐம்பத்தாறுதேசத்துக்கும் அறிக்கைப் பத்திரிகையால் தெரிவிக்க; எண்ணூற்றுக்காத வழியிலிருந்துவந்த யஜ்ஞமூர்த்தி என்கிற அத்வைதியினுடன் பதினெட்டுநாள் வாதித்து, ஜயித்து அவரை அடிமைகொண்டு, ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தார்.

இந்தக் கூரேசவிஜயமென்கிற கிரந்தத்தை தடஸ்தராயிருந்து வாசித்துக் கேட்டவர்கள் தத்வஞானமாகிய நாராயணன் பரப்பிரம்மமென்று ஸ்ருதியில் சொல்லுகிற பிரம்மஞானமுண்டாகி, அதனாலே அவர்கள், ஸ்ருதி (ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரமஹ்மணா விபச்சிதா) என்றதில் இவ்வித தத்வஞானமாகிற பிரம்மஞானமுடையவன் பிரமத்துடனே கூடியிருந்து, ஸமஸ்த ஆனந்தங்களையும் அனுபவிக்கிறானென்று சொன்னபடி, ஆனந்தமயமான பரப்பிரமத்தை அனுபவிக்கப்பெறுவர்கள்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கூரேச விஜயம்

முற்றிற்று.